பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 25 வியாழக்கிழமை (07-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:193

# நோர்வே வெளிவிவகார அமைச்சருடன் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகை

## பேச்சு முயற்சி குறித்து மேலும் பேச

கொழும்பு,ஜூன்7

**இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், தமது நாட்டின் வெளிவிவகார அமைச்சரான த்ரொப் ஜோன் ஜக்லண்டுடன் இன்று கொழும்பு வருகின்றார்.**

**சமாதானப் பேச்சுக்கான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை அகற்றுவது குறித்து இலங்கை அரசுத் தரப்புடன் பேசுவதற்காகவே இருவரும் கொழும்பு வருவதாகக் கூறப்படுகின்றது.**

இருவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் விரிவாகப் பேச்சு நடத்துவர் என்றும் -

பேச்சு முயற்சி குறித்து ஜக்லண்ட் - சொல்ஹெய்ம் குழுவினரின் இந்த விஜயத்தின் போது தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படும் என்றும் -

தெரியவருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இதேவேளை -

தேக்கமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படக் கூடிய முன்னகர்வுகள் இடம்பெறாதவரை, சமாதான முயற்சிகள் குறித்து மேலும் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தம் எதுவுமில்லை என்று விடுதலைப் புலிகள் கருதுவதாகவும்-

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரு இடங்களில் இருவர் சுட்டுக் கொலை

வவுனியா,ஜூன்7

வவுனியாப் பகுதியில் இரு வேறு இடங்களில் இருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒருவரும், நேற்றுமுன்தினம் இரவு மற்றொருவரும் சுடப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வேப்பங்குளம் ஊர்மிளாகோட்டம் குடியிருப்புப் பகுதியில் கே. செல்வரட்ணம்(வயது 38) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது வீட்டுக்கு வந்த இனந் தெரியாத சிலர் இவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சுந்தரபுரம் பகுதியில் மற்றொரு இளைஞர் வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் கோகுலவாசன் (வயது21) என்பவர் பலியானார்.

ஊர்மிளாகோட்டம் குடியிருப்பில் இடம்பெற்ற சம்பவத்தின் போது, கொலையுண்டவரின் சகோதரியும் காயமடைந்தார் என்றும் அவர் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-164)

### இனப் பாரபட்சத்தை எதிர்த்து

## வடக்கு ~ கிழக்கில் டாக்டர்கள் திங்கள் முதல் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

வடக்கு - கிழக்கில் உள்ள அரச ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் டாக்டர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

விசேட மேலதிகக் கொடுப்பனவில் அரசு காட்டிவரும் இனப் பாரபட்சத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அரச மருத்துவர்கள் இந்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

வேலைநிறுத்தக் காலத்தில் நோயாளர்களின் நலன் கருதி அவசர சிகிச்சைகளில் மட்டுமே டாக்டர்கள் ஈடுபடுவர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.கிளை தெரிவித்துள்ளது.

விசேட மேலதிகக் கொடுப்பனவை வழங்கக் கோரி ஏற்கனவே பல தடவைகள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோதும் அரசு அதற்குச் சரியான பதில் எதனையும் வழங்கவில்லை. இதனாலேயே தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவேண்டி ஏற்பட்டது என்று சங்கம் தெரிவித்துள்ளது.

(ம-5-15-139)



விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் சிலர் தமது அமைப்பு புதிதாகச் சுவீகரித்துக் கொண்ட 120 எம்.எம். கனரக மோட்டார்களை இயக்கி வன்னிப் பிரதேசத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். இணையத் தளம் ஒன்று இப் படத்தை நேற்று வெளியிட்டது.

## அநாதரவான 'பார்சலால்' மூதூரில் பதற்றம்

மூதூரில் நேற்று கடை ஒன்றில் இருந்த அநாதரவான 'பார்சலால்' சிறிது நேரம் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

'பார்சலினுள்' குண்டு இருப்பதாகச் செய்தி பரவியதை அடுத்தே அங்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## 11பொலீஸார் பதவி நீக்கம்

கொழும்பு,ஜூன்7

கண்டி தலதா மாளிகை பிரதேசத்தில் பாதுகாப்பு கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட 11 பொலீஸார் கடமைக்கு சமுகமளிக்கத் தவறியதால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணை:

## நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பதற்கு இடைக்காலத் தடை

### உயர்நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது

கொழும்பு,ஜூன்7

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை ஆராய்வதற்கு சபாநாயகர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்தால் அதைத் தடுப்பதற்கான இடைக்காலத் தடை உத்தரவை உயர்நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது.

பிரதம நீதியரசர் தொடர்பான குறற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத தெரிவுக்குழு ஆராயுமானால், அதனமூலம் நீதித் துறையின் தனித்துவம் இழக்கப்பட்டுவிடும் எனத் தெரிவித்து, உயர்நீதிமன்றில் மூன்று அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஜனாதிபதியின் சட்டத்தரணிகளான டி.பி.மெண்டிஸ், எம்.எம். சுஹைர் மற்றும் சட்டத்தரணி எச்.கே. சந்திரஸ்ரீ ஆகியோரே இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக ஹித்துர்கொட, ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த பெரேரா, ஷிராணி பண்டாரநாயக்க, எஸ்.எஸ்.யாப்பா ஆகியோர் இந்த இடைக்காலத் தடையைப் பிறப்பித்தனர்.

மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதி நடைபெறும்.

இதேவேளை, -

பிரதம நீதியரசருக்கு எதிரான ஒழுக்காற்றுக் குற்றப் பிரேரணை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் பிரேரணையை ஆதரித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

### திருகோணமலை நகரை அண்டியுள்ள

## அலஸ் தோட்ட முகாம் அகதிகளை இடம்மாற்ற இராணுவம் பணிப்பு

கொழும்பு, ஜூன்7

திருகோணமலை மாவட்டத்தில் இன வன்முறைகள் காரணமாகத் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து பத்து வருடகாலமாக அலஸ்தோட்ட அகதி முகாமில் வசித்து வரும் 1500 அகதிகளை நகரிலிருந்து சுமார் 40 கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் குச்சவெளிக்கு இடம் மாற்றும்மாறு அரச அதிகாரிகளுக்கு இராணுவம் பணிப்புரை விடுத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

### தேன் எடுக்கச் சென்ற சமயம்

## காணாமற்போன 3 பேர் கொல்லப்பட்டதாக அறிவிப்பு

### படை அதிகாரி செஞ்.குழுவிடம் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன்7

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் உள்ள மதுரக்கேணிப் பகுதிக் காடுகளில் தேன் எடுக்கச் சென்ற சமயம் காணாமற்போன மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக அவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று ஐ.பி.சி. நேற்றிரவு அறிவித்தது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி தேன் சேகரிக்கச் சென்ற முருகன் மங்களேஸ்வரன், இராமலிங்கம் சுப்பிரமணியம், வேல்முருகு செல்வராஜா ஆகிய மூவரையும் காட்டில் பதுங்கி இருந்த படையினர் கைது செய்து அழைத்துச் சென்றதாகவும்-

(14ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் வல்லுறவுச் சம்பவம்

## சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவில்லை!

வவுனியா,ஜூன்7

மன்னாரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரு குடும்பப் பெண்கள் தொடர்பான வழக்கில நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலீஸ் மற்றும் கடற்படையைச் சேர்ந்த 14 பேரும் நேற்று விசாரணைத் தவணையின் போது மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை.


எனினும் சந்தேகநபர்கள் இல்லாத நிலையில் விசாரணைகளை நடத்திய மன்னார் நீதிவான் சந்தேகநபர்களைத் தொடர்ந்து இரு மாதங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் எதிர்வரும் 20ஆம் திகதி சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளை நீதிவான்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு பரம எதிரிகள் மத்தியஸ்தம் இன்றி பேசத் தயார்!





கடந்த 23ஆம் திகதி இரவு சுமார் பத்து மணிக்கு வந்தன அந்த அதிரடி அறிவிப்புகள்...

ஓர் அறிவிப்பு - கடந்த ஆறு மாதங்களாக ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் நிறுத்தம் ரத்துச் செய்யப்பட்டது என்றது. மற்றொரு அறிவிப்போ - பாகிஸ்தான் அதிபர் (தலைமை நிர்வாகி) ஜெனரல் பர்வேஷ் முஷ்ரப்பை இந்தியா பேச்சுக்கு அழைத்தது.

முதல் அறிவிப்பை விட இரண்டாவது விவகாரம்தான் உலக அரங்கின் ஒட்டு மொத்த நாடுகளையும் நிமிர்ந்து உட்கார வைத்தது. டில்லி அரசியல் வட்டாரங்கள், பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல ... மத்திய அமைச்சர்களே கூட இப்படி ஓர் அறிவிப்பு வெளியாகப்போவதை முன் கூட்டி மோப்பம் பிடிக்கவில்லை!

**இரண்டு எதிரி நாடுகள் யாரையுமே மத்தியஸ்தமாக வைத்துக்கொள்ளாமல் பேச்சுவார்த்தை நடத்தப்போவதை உலகமே வியப்போடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது இப்போது!**

'முட்டிக்கோ மோதிக்கோ' என்றிருக்கும் பாகிஸ்தானை நோக்கி இப்படி ஓர் அழைப்பு ஏனென்ற ஆச்சரியம் அடங்குவதற்குள் மற்றொரு ஆச்சரியம் 'இந்தியப்பிரதமர் அனுப்பியிருக்கும் அழைப்புக் கடிதம் கசப்பான உணர்வு எதனையும் உருவாக்கவில்லை. எங்களிடமிருந்தும் நட்பான பதிலே போகும்' என்று பாகிஸ்தானிய அதிகார வட்டாரங்கள் தெரிவிப்பதாக செய்திகள் வெளியாகின.

'முதலில் பிரதமருக்கு முழங்கால் ஒப்பரேஷன். அதன்பிறகு இந்தச் சந்திப்பு நடக்கும்' என்று டில்லி வட்டாரங்கள் சொல்லிக்கொண்டிருக்க.. பாகிஸ்தான் சர்வாதிகாரி முஷ்ரப்பை இந்தியா ஏன், எப்படி அழைத்தது என்பது பற்றி அடுக்கடுக்காக நமக்குத் தெரியவந்த சுவாரஷ்யங்கள்..!

பர்வேஷ் முஷ்ரப் பாகிஸ்தானில் ஆட்சிப்பொறுப்புக்கு வந்த ஜோரில், 'இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்துவேன்' என்று கூறினார். ஆனால், பாகிஸ்தானில் ஜனநாயக ரீதியில் இருந்த அரசைக் கவிழ்ப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தப் பேச்சு வார்த்தையை நிராகரித்தார் வாஜ்பாய்.

கடந்த ஆண்டு இறுதியில், இந்தியாவில் உள்ள பாகிஸ்தானின் தூதுவர் அஷ்ரப் ஜஹாங்கீர் காஸி அடிக்கடி உள்துறை அமைச்சர் எல்கே.அத்வானியைச் சந்திக்க ஆரம்பித்தார். திரைமறைவில் காய்கள் நகர்ந்து கொண்டே இருந்தன.

இந்திய வெளியுறவுச் செயலாளரும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளரும் தொலைபேசி மூலமும் கமுக்கமாகவும் அடிக்கடி பேசினார்கள்.

இந்தப் பேச்சுக்களின் விளைவாக, கடந்த ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி இந்தியாவின் செக்யூரிட்டி கமிட்டி கவுன்ஸில் 'ரம்ஜானை முன்னிட்டு காஷ்மீரில் போர் நிறுத்தம்' என்று அறிவித்தது.

செக்யூரிட்டி கமிட்டி கவுன்சிலின் அறிவிப்பாக இருந்தாலும் இதன் பின்னணியில் இருந்தது மூவேந்தர்களின் பங்குதான்!

பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் ஆகியோர்தான் இந்த மூவேந்தர்கள். இவர்கள் மூவரும் சேர்ந்து கில்லாடியான முன்னாள் அதிகாரி ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இந்திராகாந்தி காலத்தில் வெளியுறவு விவகாரங்களில் சுறுசுறுப்பாகச் செயற்பட்டவர், குறிப்பாக இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் கவனஞ்செலுத்தியவர் அந்த அதிகாரி. இதனால் பாகிஸ்தான் நாட்டில் அரசியல் மற்றும் உள்நாட்டு விவகாரங்கள் எல்லாம் இவருக்கு அத்துப்படி! இவரை மார்ச் மாதமே பாகிஸ்தானுக்கு அனுப்பினர் மூவேந்தர்கள். முஷ்ரப்பிடம் பேசி, அவரது மூடைத் தெரிந்துகொண்டு திரும்பி அந்த முன்னாள் அதிகாரி அப்படியே மூவேந்தர்களிம் சொல்ல.. நம்பிக்கையோடு அடுத்தகட்டத் திட்டமிடுதலில் இறங்கினார்கள்.

பாகிஸ்தானில் உள்ள நமது தூதுவர் ஓ.பி.நம்பியார் அடிக்கடி முஷ்ரப்பைப் போய்ச் சந்தித்துப் பேசி, இரு தரப்புப் பேச்சுவார்த்தைக்குத் தயார்ப்படுத்த ஆரம்பித்தார்.

எப்போதுமே பி.ஜே.பியின் செல்லத் (மறைமுக) தூதர்களாகச் செயற்படும் இந்தியப்பத்திரிகையாளர்கள் சிலர் அடுத்தபடியாகக் களமிறக்கப்பட்டனர்.

பாகிஸ்தான் சர்வாதிகாரியைப் போய் பேட்டி எடுத்தனர் இவர்கள். இந்தப் பத்திரிகையாளர்கள் மூலம் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சிலரும் முடுக்கப்பட, அவர்களும் முஷரப்பை பேட்டி எடுக்க ஆரம்பித்தனர். 'இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் உங்கள் (முஷ்ரப்) மரியாதை உலக அரங்கில் கூடும்' என்று அவர்கள் பேட்டிக்கு நடுவே சொல்லிவிட்டு வநதனர்.

இப்படிப் பத்திரிகைகள் எடுத்த முயற்சிகளைத் தொடர்ந்தே, இந்திய வெளியுறவு அமைச்சகம் 'பாகிஸ்தானுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைக்குத் தயார் - என்று அதிகார பூர்வமாக அறிவித்தது. இப்போது கடிதமும் போயிருக்கிறது.

சரி, ஒரு பக்கம் பேச்சுவார்த்தைக்கு அடி போட்டு விட்டு மறு பக்கம் போர் நிறுத்தம் ரத்து என்று அறிவித்தது ஏன்?

காரணம் இல்லாமல் இல்லை!

கடந்த சில வாரங்களுக்கு முன்பு உள்துறை அமைச்சர் அத்வானியும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங்கும் காஷ்மீர் சென்று வந்து, ஓர் அறிக்கை தயாரித்தனர். அதில் 'படுகொலைகள் தொடர்ந்து நடக்கின்றன; போர் நிறுத்தம் தொடர்வது நல்லதல்ல; ரத்துச்செய்ய வேண்டும்' எனறு அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

'போர் நிறுத்தத்தை நீடிக்கச் செய்து முஷ்ரப்பையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் இந்தியா ரொம்பப் பணிந்து போவதாக அர்த்தம் வரலாம்' என்ற கருத்தையும் இவர்கள் பிரதமரிடம் கூறியுள்ளனர். அதைத் தொடர்ந்து கடைசி ரவுண்டாக தீர ஆலோசித்து கபினெட் கூட்டத்தில் கூட இது பற்றி ஒரு வார்த்தையும் பேசாமல் திடீர் அறிவிப்பாக வெளியிட்டனர்.

கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் பிதரமர் வீட்டில் ஒரு டின்னர் நடந்தது. அங்கேதான் இறுதி முடிவு எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அன்றைய தினம் இரவு ஏழேகால் மணிக்கு நடந்த செக்யூரிட்டி கமிட்டிக் கவுன்சிலில் வைத்து முடிவெடுக்கப்பட்டு, அங்கே முஷ்ரப்புக்குக் கடிதம் தயாரானது. இந்தக் கடிதம் ஓ.பி.நம்பியார் மூலமாகவே முஷ்ரப்புக்குப் போய்ச் சேர்ந்தது! இரண்டு எதிரி நாடுகள் யாரையுமே மத்தியஸ்தமாக வைத்துக்கொள்ளாமல் பேச்சுவார்த்தை நடத்தப்போவதை உலகமே வியப்போடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது இப்போது! "இந்திய நேசரான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளினடனின் பங்கும் இதில் இருக்கிறது" என்று டில்லி சீனியர் பத்திரிகையாளர்கள் கிசுகிசுப்பதிலும் உண்மை இருக்கலாம். *(நன்றி:- ஜுனியர் விகடன்)*

---


## அம்பாள் விளையாட்டுக் கழகம் - சுதுமலை

சமய கலாசாரப் பிரிவினர் நடத்திய

**சைவ சமய அறிவுப் போட்டி - 2001**

**பரிசளிப்பு வைபவம்**

இடம் : சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் முன்றில்
காலம் : இன்று (07.06.2001) வியாழக்கிழமை
நேரம் : பிற்பகல் 5.30 (பழைய நேரம்)
பிரதம விருந்தினர்கள் : 1. திரு.V.A. ஜோன்சன் அவர்கள் (வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர்)
2. திரு.N.திரிலோகநாதன் (ஈ.பி.டி.பி. சமய விவகாரப் பொறுப்பாளரும் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும்)

(C/17024) - விளையாட்டுக் கழகத்தினர்.



## வாடகைக்கு உண்டு

அன்பார்ந்த வாடிக்கையாளரே உங்களது மங்களகரமான நிகழ்வுக்குத் தேவையான

| | | |
|---|---|---|
| சொக்கட்டான் பந்தல் | - | சாதாரண பந்தல் |
| சைவ மணவறை | - | கிறிஸ்தவ மணவறை |
| சோடினை வகைகள் | - | மணப் பெண் கவரிங் நகை |
| சமையல் பாத்திரங்கள் | - | அலங்காரப் பொருள்கள் |

என்பன குறைந்த செலவில் நிறைந்த தரத்தில் எங்களிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

தொலைபேசி இல:- 021 - 2392
(மக்கள் வங்கிக்கு அருகில்)

அன்ரனி நிலையம்
172, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (88776)


## கண்ணீர் அஞ்சலி

**செல்வி சீதாதேவி கந்தையா**

(இளைப்பாறிய ஆசிரியை, யா/அருணோதயக், கல்லூரி, அளவெட்டி)

அருணோதயக் கல்லூரியின் பழைய மாணவியும், நீண்ட காலமாகக் கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியையுமான

**செல்வி சீதாதேவி கந்தையா**

அவர்கள் 06-06-2001 அன்று இறைவனடி சேர்ந்தார். அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
மாணவர்கள், சிற்றூழியர்கள்,
யா/அருணோதயக் கல்லூரி,அளவெட்டி

(88765)

---

**ஒரு லட்சத்து 16 ஆயிரம் குடும்பங்களுக்கு**

## உலர்உணவு நிவாரணத்தை தொடர்ந்து வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்7

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே உலர்உணவு நிவாரணம் பெற்றுவரும் ஒரு லட்சத்து 16 ஆயிரம் குடும்பங்களுக்கும் தொடர்ந்து நிவாரணம் வழங்குமாறு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ் செயலக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உலர்உணவு நிவாரணம் பெறுபவர்களின் விவரங்கள் அண்மையில் மீளாய்வு செய்யப்பட்டன. மீளாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையிலேயே மே மாதம் தொடக்கம் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி நிவாரணம் பெறுபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செயலக அதிகாரிகள் மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

குடாநாட்டின் பல இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாதிருப்பதாலும் -

மீனவர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் வருமானம் எதுவும் இன்றி இருப்பதாலும் -

தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரணத்தை எவருக்கும் நிறுத்த வேண்டாம் என்று அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.செயலக அதிகாரிகளை ஸ்ரான்லி வீதியிலுள்ள தமது அமைச்சு அலுவலகத்துக்கு நேரில் அழைத்த அவர் இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து மே மாதத்துக்கான நிவாரணம் அனைவருக்கும் வழங்கப்படும் என்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ம-5)

### மிதிவெடியில் சிக்கிக் காயம்

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள தமது வீட்டையும் ஆலயத்தையும் பார்த்து வரச் சென்ற பூசகர் ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இடம் பெயர்ந்து அல்வாயில் வசித்து வரும் சாவகச்சேரி முத்துமாரியம்மன் கோயில் பூசகரான த.வீரபத்திர ஐயர் (வயது52) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-15)

### சடலம் அடக்கம் செய்யப்பட்டது

யாழ்.கோட்டை சுரங்கப் பகுதியில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட ஆணின் சடலம் ஆடையாளம் காணப்படாததை அடுத்து நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் இருந்ததினால் சடலத்தை [illegible] அடக்கம் செய்ததாக யாழ்.போதனா ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## முன்பள்ளி ஆசிரியர், உதவியாளருக்கு சம்பளத் தொகை நிர்ணயம்

யாழ்ப்பாணம்,ஜுன்7

குடாநாட்டில் இயங்கிவரும் அனைத்து முன்பள்ளி நிலையங்களினதும் ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களுக்கான சம்பளத் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை தொழில் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் விசேட பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்தச் சம்பளத்திட்டத்தை இம்மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி மாநகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி நிலைய ஆசிரியர்களுக்கு மாதாந்தம் குறைந்தது 3000 ரூபாவும் இவர்களின் உதவியாளர்களுக்கு ஆகக்குறைந்தது 1750 ரூபாவும் வழங்கப்பட வேண்டும்.

நகர சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் குறைந்தது 2500 ரூபாவும் அவர்களின் உதவியாளர்களுக்கு 1500 ரூபாவும் வழங்கப்பட வேண்டும்.

பிரதேசசபைகளின் எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 2000 ரூபாவும் அவர்களின் உதவியாளர்களுக்கு 1250 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்றும் தொழில் திணைக்கள அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.(க-4)

### சந்நிதியான் ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம்,ஜுன்7

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் வாராந்த வெள்ளி நிகழ்வுத் தொடரில் நாளை பண்ணிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தேனருவி வே.சிவஞானம் இந்த நிகழ்வில் பண்ணிசையை நிகழ்த்துவார். அறிமுக உரையை பேரவை உறுப்பினர் சி.நவரத்தினம் நிகழ்த்தவுள்ளார். (க-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மறைமுக அடி!

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற மக்களின் மனிதஉரிமைகளைப் பறிக்கும் மிகக் கூரான ஆயுதம், கடந்த சுமார் இரண்டு தசாப்தங்களாகத் தமிழ் மக்களின் வாழ்வியலின் முதுகெலும்பை நொறுக்கி உடைத்து வருகிறது.

இப்போதைக்கு அந்தச் சட்டம் தமிழ் மக்களையே மிகப் பெரிய அளவில் பதம் பார்த்து வந்தாலும், எந்த நேரமும் சிங்கள மக்களையும் வெட்டிக் காயப்படுத்தும் என்பது நிச்சயம். அதுகுறித்து அவர்களில் பல தரப்பாருக்கும் தெரியும். ஆனால் அதனை எதிர்த்துக் குரல் கொடுப்பதில்லை; அதில் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை.

பெரும்பான்மை இனத்தவரின் கழுத்தில் வந்து வீழுந்த பிறகு பார்ப்போம் என்று வாளாது இருக்கிறார்களோ அல்லது இப்போது தமிழருக்கு எதிராகத்தானே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது என்று குரல் கொடுக்காதிருக்கிறார்களோ என்பது ஆய்வு செய்யப்பட வேண்டியது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்காவிடினும் அதிலுள்ள பயங்கரமான சில விதிகளையாவது நீக்கவேண்டும் என்று தமிழர் தரப்பிலிருந்து கடந்த பல வருடங்களாக விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

ஆனால் இப்போது அந்தச் சட்டத்தை நீக்குவ்து குறித்து அரசு கவனம் செலுத்த முன்வந்துள்ளது. அரசின் இந்தத் திடீர் மனமாற்றத்திற்கு ஐரோப்பிய நாடுகளே காரணம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் பலவும் கொடுத்த நெருக்குதல்களைத் தொடர்ந்து, அமைச்சர் கதிர்காமரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக கிறது. மேற்படி சட்டத்தை நீக்குவதனால் உண்டாகக்கூடிய சாதக, பாதகங்களை, அந்தக் குழு ஆராய்ந்து செய்யும் சிபார்சைத் தொடர்ந்து - அதனைப் பொறுத்து - அரசின் முடிவு, நடவடிக்கை அமையும்.

பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் அரச படையினருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள அதீத பாதக அதிகாரங்களால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். அவர்களின் மனித உரிமைகள் வெளிப்படையாக, சட்டரீதியாக மீறப்படுகின்றன.

ஆகையால் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள், மிகக் குறிப்பாக தமிழ் இளைஞர், யுவதிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு தஞ்சம் கோரிச் செல்கின்றனர். அவர்கள் தமக்கு நேர்ந்த இழப்புக்களை, துயரங்களை, தொல்லைகளை ஆவண ரீதியாக சமர்ப்பிக்கும் போது பயங்கரவாதத் தடைச் சட்டமே அவற்றுக்கு மூல காரணம் என்பதனை ஐரோப்பிய நாடுகளின் அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இலங்கையில் வாழ்ந்தால் உயிருக்கு ஆபத்து என்ற தமிழர்களின் நிலையால், அவர்களின் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதால், மனித நேயத்தின் பொருட்டும், நீதியின் பேரிலும் அவர்களுக்கு தற்காலிகமாகவேனும் தஞ்சம் வழங்க வேண்டிய கட்டாய நிலை அந்த நாடுகளுக்குத் உண்டாகிறது.

தத்தமது நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் கோருவதை நிறுத்துவதாயின், தஞ்சம் அளிக்க வேண்டிய ஒருவகை நிர்ப்பந்தத்தைப் போக்க வேண்டுமாயின், இலங்கை அரசாங்கத்தைக் கொண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாமற் செய்வது தான் சிறந்த வழி என்று ஐரோப்பிய அதிகாரிகள் சிந்தித்திருக்கிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளின் இந்தக் கோரிக்கைக்கு - நெருக்குதலுக்கு - இலங்கை அரசு செவி சாய்த்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. முழுதாக இல்லாவிடினும் அரையோ குறையோ, ஏதாவது செய்தாக வேண்டும். பயங்கரவாதச் சட்டத்தை முற்றாக நீக்காவிட்டாலும் அதன் பாதகமான பகுதிகளில் சில வற்றையாவது நீக்க நேரிடும்.

அவ்வாறு செய்து அந்நாடுகளுக்கு அரசு உதவாவிடின், அவற்றிடம் இருந்து கிடைக்கும் நிதி உதவிகள் நின்றுவிடும் அல்லது குறைந்துவிடும். இதனைத் தவிர்க்கும் பொருட்டு அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைவைத்தாக வேண்டிய கட்டாயம் தோன்றியுள்ளது. இதனை அரசுக்கு விழுந்த மறைமுகமான அடி என்று கருதலாம்.

# விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு செஞ்சிலுவைக் குழு கருத்தரங்கு

மட்டக்களப்பு,ஜூன்7

செஞ்சிலுவை சர்வேதசக்குழு தனது பரப்புரை திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

அன்மையில் மட்டக்களப்பின் இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் நடத்தப்பட்ட இப் பரப்புரை கருத்தரங்கில் ஆண்களும் பெண்களுமாக 70 விடுதலைப் புலிகள் கலந்து கொண்டனர்.

போரில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அடிப்படை மனிதஉரிமை விதிகள் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கொள்கைகள், பணிகள் என்பவை தொடர்பாக இப் பரப்புரையின் போது விளக்கமளிக்கப்பட்டது. இக் கருத்தரங்கில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் மட்டக்களப்பு அலுவலக அதிகாரிகளும் கொழும்பு தலைமையகத்தில் இருந்து வருகை தநத பரப்புரை உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர்.

மோதலில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் இத்தகைய பரப்புரைகளை செஞ்சிலுவை சர்வதேசக் குழு நடத்தி வருகின்றது. கடந்த மாதம் அம்பாறை, பொலன் நறுவை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அரச படையினருக்கு இத்தகைய பரப்புரை கருத்தரங்குகள் நடத்தப்படமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## நாட்டு நடப்பு

சிக்ஸர் அடித்த தோளும்
சிகரெட் பிடித்த கையும்
ஒன்றன் பின் ஒன்றாய் விஸ்கி
ஒரு சேர சுவைத்த நாவும்
மண்ணிறப் பவுடர் பைக்கற்
மனதார இழுத்த மார்பும்
கொண்டிடும் எயிட்ஸ் நோய் தாங்கி
கொழுநனும் பிளேனில் வந்தான்.

*- விகடகவி.*

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து நடத்தும் திரைப் படக்காட்சித் தொடரில் 'திராவிட அரசியல் குறித்த மீள் விசாரணையில் தமிழ் சினிமா' என்னும் தலைப்பின் கீழ் கே.பாலச்சந்திரனின் 'அச்சமில்லை அச்சமில்லை' பாரதிராஜாவின் 'என்னுயிர்த்தோழன்' மணிரத்தினத்தின் 'இருவர்' போன்ற திரைப் படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

இந்தத் திரைப்படங்கள் முறையே நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் அடுத்து வரும் மூன்று சனிக்கிழமைகளிலும் யாழ்.பல் கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளன.

(ஐ-5)

# இந்து மத குரு பீடாதிபதியாக மகேஸ்வரக் குருக்கள் தெரிவு

வலிகாமம்தெற்கு,ஜூன்7

சர்வதேச இந்து மத குருமார் ஒனறியத்தின் தலைவர் சிவஸ்ரீ ச.மகேஸவரக் குருக்கள் இரண்டாவது இந்து மதகுரு பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நீராவியடியில் உள்ள சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரமத்தில் நேற்று குருபீடாதிபதி தெரிவு இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலும் இருந்து வருகை தந்த நூற றுக்கணக்கான அந்தணர்கள் சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்களை ஏகமனதாக குருபீடாதிபதியாகத் தெரிவு செய தனர்.

சர்தேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் நாவலர் ஆச்சிரமத்தில் நேற்று நடைபெற்ற போதே குரு பீடாதிபதி தெரிவு இடம்பெற்றது.

முதலாவது பீடாதிபதியான சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியாரின் மறைவுக்குப் பின்னர் கடந்த ஆறு ஆண்டு கால இடைவெளியின் பின் இப்பீடாதிபதி தெரிவு இடம்பெற்றுள்ளது.

வித்வ சபைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் உறுப்பினர்களான சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள், சிவஸ்ரீ ச.சிதரம்பரநாதக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில் அவர்களின் சிறப்புரைகளைத் தொடர்ந்து குரு பீடாதிபதித் தெரிவு நடைபெற்றது.

65 வயதுடைய குரு பீடாதிபதி சிவஸ்ரீ ப.மகேஸ்வரக்குருக்கள் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயப் பரம்பரை குருத்துவரும் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய நீண்டகாலச் சிவாச்சாரியாரும் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவராகவும் விளங்குகின்றார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் பீடாதிபதித் தெரிவின்போது சமுகமளித்திருந்தார். அங்கு அவர் சிறப்புரையுமாற்றினார்.

குரு பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் மற்றும் சர்வதேச் இந்து குருமார் ஒன்றியத் தலைவர், செயலாளர் ஆகியோர் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் சகிதம் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, இந்து மத விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது காரியாலத்துக்குச் சென்று சந்தித்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நல்லூார் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் மற்றும் ந.திரிலோகநாதன் ஆகியோர் அங்கு குரு பீடாதிபதிக்கு மாலையிட்டு வணங்கி அவரின் ஆசியையும் பெற்றுக்கொணடனர்

(ஐ-152-4)




மக்கள் வங்கியின் ஜெயஸ்ரீ சேமிப்புத் திட்டத்தின் கீழ் அதிர்ஷ்டசாலியான தும்பளையைச் சேர்ந்த திருமதி நந்தினி பத்மநாதனுக்கு பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் பொன். கணேசலிங்கம் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை பரிசாக வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம் வடமராட்சி செய்தியாளர்)*

# 'துலக்கம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்7

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் சமூகக்கல்வி தினத்தை ஒட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு "துலக்கம்" நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக தீவக கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக உதவிக்கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸும் கலந்து கொள்வர்.

(க-5)

# நெடுந்தீவு பிரதேச சபைக்கு 12 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு,ஜூன்7

நெடுந்தீவு பிரதேச சபைக்கு பனமுகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தன் கீழ் இந்த ஆண்டுக்கென 12 லடசம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொது நூலகங்கள், சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகளுக்கான நூல்கள், தளபாடங்கள், புதிய கிணறுகளை அமைத்தல், இந்து, கத்தோலிக் மயானப் புனரமைப்புக்கள் உட்பட வீதிகள் திருத்தம், அந்திய கால சேவைக்குரிய வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இந்த ஆண்டுக்கான புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கென ஏற்கனவே இரண்டு கோடி 37 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(க-111)

## திருமலையில் கல்விப் பணிப்பாளர்களின் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம், 15ஆம் திகதிகளில் திருமலையில் மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக கூட்டத்தில் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்வர்.

# யாழ். நகரில் வீதி ஒழுங்குகளை பேணுமாறு பொலீஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்நகரில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளைக் கடைப்பிடிக்குமாறு போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

யாழ்.நகர வீதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு சில வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.நகருக்கு வரும் சைக்கிள்கள் தவிர்ந்த சகல வாகனங்களும் கஸ்தூரியார் வீதி வழியாக உள்ளே பிரவேசிக்கவும் -

கே.கே.எஸ். வீதி வழியாக வெளியேறவும் -

ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஒரு வழிப் பதையாக அறிவிக்கப்பட்டிருக்கும் இவ்விரு வீதிகளிலும் வீதிப் போக்குவரத்து விதிகளுக்கு அமைய ஒழுங்குகளைப் பேணி நடக்குமாறு சகல பொது மக்களுக்கும், வாகன உரிமையாளர்களுக்கும் பொலீஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாதசாரிகளுக்கும், நகரவாசிகளுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தாமல் இந்த வசதிகளைக் கடைப பிடிக்குமாறும் பொலீஸார் கேட்டுள்ளனர்.

(ஐ)

## கும்பாபிஷேக நிகழ்வு இன்று ஒலிபரப்பு

யாழ்ப்பாணம், ஜூன்7

கோப்பாய் தெற்கு - அத்தித் தோட்டம் அருள் மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை நடை பெறும் கும்பாபிஷேக நிகழ்வுகளின் நேர் முக வர்ணனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவையில் இரவு - 9.30 மணிக்கு ஒலிபரப்புச் செய்யப்படும்.

கவிஞர் எம்.பி.அருளானந்தம் இந் நிகழ்வை தொகுத்து வழங்குவார்.

(க)

## நாளை

வைகாசி 25
வெள்ளிக்கிழமை
திதி: துதியை
முற்பகல் 9.13 வரை
நட்சத்திரம்: பூராட்டம்
பின்னிரவு 3.05 வரை.
சுபநேரம் : 5.52 - 7.22
ராகுகாலம் : 10.22 - 11.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தோல்வி எப்போது வருகிறது? தோல்வி அடைந்து விடுவோமோ என்று எண்ணிய பொழுதில்தான்.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



எமது பிரதேசங்களின் - தேசத்தின் - மனித வளத்தையும் ஆற்றலையும் கண்ணிவெடிகள் அழித்துவிடுகின்றன. அவை குறித்து எப்போதும் எச்சரிக்கையாக இருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

## ஆரம்பத்தில் வாழைப்பழம் வழங்க ஏற்பாடு

நெடுந்தீவு, ஜூன் 7

தீவுப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. முன்னோடியாக மாணவர்களுக்கு வாழைப்பழம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் இருந்து தென்பகுதிகளுக்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்வது முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில், பெரும்பாலான விவசாயிகள் வாழைச் செய்கையைத் தவிர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு வாழை உற்பத்தியை மீண்டும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் எனவும், மாணவர்களுக்கு வாழைப்பழத்தைச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் வழங்கு நடவடிக்கை எடுப்பதனால் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவும் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கருதுகின்றது.

முதலில் தீவுப்பகுதி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் இத்திட்டம் பின்னர் யாழ். மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரிகின்றது. (க-111)

# நெடுந்தீவில் கலாசார மண்டபம்; கட்டடம் பூர்த்தியாகும் நிலை

நெடுந்தீவு, ஜூன் 7

நெடுந்தீவு பிரதேச சபையினால் குமாரசாமி உடையார் சதுக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் டக்ளஸ் தேவானந்தா கலாசார மண்டபத்தின் இரண்டாம் கட்ட இறுதி வேலைகள் ஒகஸ்ட் மாதத்திற்குள் பூர்த்தியடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'றான்' புனரமைப்பு வேலைத்திட்ட அடிப்படையிலான நிதிஒதுக்கீடாக இந்த ஆண்டு மேற்படி மண்டபத்திற்கென முப்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர மின்சார விநியோக விஸ்தரிப்புக்கென 40 லட்சம் ரூபாவும், இந்துக் கோயில்கள் புனரமைப்புக்கென பதினொரு லட்சம் ரூபாவும் கத்தோலிக்க தேவாலயங்கள் புனரமைப்புக்கென 13 லட்சம் ரூபாவும், வைத்தியசாலை புனரமைப்பும் பொருள்கள் கொள்வனவுக்குமென ஐந்து லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளார். (க-111)

# போலிஅனுமதிப்பத்திரங்களுடன் வடமராட்சிகிழக்கில்மரக்கடத்தல்

## முகவரின் 'கைங்கரியம்' அம்பலம்

வடமராட்சி கிழக்கு, ஜூன் 7

மரக்கூட்டுத்தாபனத்தின் போலியான அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி வடமராட்சி கிழக்கிலிருந்து பயன்தரும் மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்பட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து மா, வேம்பு போன்ற பயன்தரும் மரங்கள் கடந்த காலத்தில் அதிகளவு வெட்டப்பட்டு கடத்தப்பட்டமையை அடுத்து, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை இவ்விடயத்தில் தலையிட்டது. அதைத் தொடர்ந்து முகவர் ஒருவர் மரக்கூட்டுத்தாபனத்தின் போலியான அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தி மரக் கடத்தலில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் இவ்விடயத்தை உரிய அதிகாரிகளின் கவனத்தின் கீழ் கொண்டு வந்துள்ளார். (க-182)

## விளையாட்டு நிகழ்வு

வலி. வடக்கு, ஜூன் 7

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் உடுவில் ஞானப்பிரகாசர் விளையாட்டுக் கழகத்துடன் கொக்குவில் காந்திஜி விளையாட்டுக் கழகம் மோதும். (க-86)

## கரவெட்டிப் பாடசாலைக்கு அன்பளிப்பு

வடமராட்சி, ஜூன் 7

பத்தாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரும், தற்போது கனடாவில் வசித்துவருபவருமான க. கந்தசாமி இப் புத்தகங்களை அனுப்பி வைத்துள்ளார்.

இதே வேளை —

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் பாவனைக்கென தொலைக் காட்சிப்பெட்டி, டெக் ஆகியன அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கல்லூரியின் ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம் தொலைக்காட்சிப் பெட்டியையும், கல்லூரியின் பழைய மாணவன் அமரர் கி. ராஜ்குமார் நினைவாக அன்னாரின் குடும்பத்தினர் டெக்கையும் கல்லூரி அதிபர் க.செல்வராசாவிடம் கையளித்தனர். (க-173)

# 2006 வரை எமது அரசை எவரும் அசைக்க முடியாது

## காலியில் அமைச்சர் பத்திரன

கொழும்பு, ஜூன் 7

2006 ஆம் ஆண்டு வரை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை எவராலும் அசைக்க முடியாது. அடுத்த தேர்தல் வரையும் எமது ஆட்சியே தொடருமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்தார்.

காலியில் அமையவிருக்கும் 12 மாடிகளைக் கொண்ட புதிய மாவட்ட செயலகத்துக்கான அடிக்கல்லை நட்ட பின்னர் ரயில் நிலையத்துக்கு அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

ஐ. தே. கட்சியினர் என்னதான் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பொதுஜனஐக்கியமுன்னணிஅரசைக் கவிழ்க்க முடியாது ஐ தே. கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் எம்மோடு இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர் — என்றார்.

போக்குவரத்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உரையாற்றுகையில்:-

இன்னும் இரு மாத காலங்களில் பஸ் உரிமையாளர்களையும், பயணிகளையும் பாதுகாக்கும் வகையில் புதிய பஸ் கட்டண முறையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

நிர்வாகத்துறையில் மிகச் சிறந்ததுறை அரச நிர்வாகத்துறையாகும். நாட்டின்முன்னேற்றம் நிர்வாகத்திலேயே தங்கியிருக்கிறது. அமைச்சர் றிச்சர்ட் பத்திரன கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் பல்கலைக்கழகங்கள் முடப்படவில்லை. இப்போது அவர் வசிக்கும் அரச நிர்வாகத்துறையும் முன்னேற்றமடைந்து வருகிறது என தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (க)

# இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக யாழ்., மன்னார் ஆயர்களுடன் ஜே.வி.பி. பிரதிநிதிகள் பேச்சு

கொழும்பு, ஜூன் 7

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து மக்கள் விடுதலை முன்னணிப் (ஜே. வி. பி.) பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆயர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பு, பொரளையில் உள்ள ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இவ்விசேட கலந்துரையாடலில் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிகளில் பிரிந்து நின்று செயற்படாமல் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

ஜே. வி. பியினர் இனப் பிரச்சினைத் தீர்வு விடயம் சம்பந்தமாக வடபகுதி ஆயர்களைச் சந்தித்தது இதுவே முதற்றடவையாகும். இச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## லண்டனில் குருக்களுக்கு பாராட்டு விழா

லண்டன் சென்றுள்ள இணுவில் காயத்திரி பீடாதிபதியும், தர்மசாஸ்தா குருகுல அதிபருமாகிய சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்களுக்கு லண்டனில் உள்ள அவரின் மாணாக்கர்களாலும், சைவசமய நிறுவனங்களாலும் பல பாராட்டு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

லண்டனில் உள்ள வேதாகம நிறுவனத்தில் குருக்களுக்கு சிறப்பான பாராட்டு விழா ஒன்று கடந்த மாதம் 20 ஆம் திகதி நடைபெற்றது.

லண்டன் விம்பிள்டன் பிள்ளையார் கோவில், லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் கோவில், லண்டன் ரூலிங் மாரியம்மன் கோவில் ஆகிய இடங்களிலும் அங்குள்ள மாணவர்களாலும், சைவமக்களாலும் பாராட்டு வைபவங்கள் நடத்தப்பட்டன. (க-152)

## அம்பனுக்கு பஸ் சேவை அதிகரிப்பு

பருத்தித்துறை — அம்பன் பஸ்சேவை மேலும் இரு சேவைகளால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தற்போது பருத்தித்துறையிலிருந்து அம்பனுக்கு நான்கு சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து காலை 6.10 மணிக்கும் 8 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் 3.30 மணிக்கும் அம்பனுக்கான சேவைகள் நடத்தப்படுகின்றன. (க-182)

## சம்பந்தர் குருபூசை

சுழிபுரம், ஜூன் 7

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறும். சம்பந்தர் வரலாறு வாசிக்கப்பட்டுப் பாடல்கள் பாடப்பட்டு பூசைகள் நடைபெறும்.

கழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயத்தில் நண்பகல் வேளை புராணபடனம், பூசை நடைபெறும்.

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் பிற்பகல் சம்பந்தர் திருமுறை பாடப்பட்டு பூசை நடைபெறும். (க-28)


உ

வடமராட்சி- கரவெட்டி - மித்தில்பதி

**மருதடி ஸ்ரீஞானவைரவர் கோயில் ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேக விழா**

இன்று (07-06-2001) வியாழக்கிழமை காலை 6.31 - 8.04 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக பிரதிஷ்டா குரு :
செஞ்சொற் கவிதாசிரோமணி சிவப்பிரம்மஸ்ரீ
துன்னையூர் ந.ம். தேவலோகேஸ்வரக்குருக்கள்
(பிரதம குரு கருமாரி அம்மன் கோயில், கொள்ளுப்பிட்டி)

ஆதினகுரு : பிரம்மஸ்ரீ ந.ம். சபாநாதசர்மா
(அல்லையம்பதி முருகன் கோயில்)

சர்வசாதகம்: சிவஸ்ரீ கணேச. சபாபதிக்குருக்கள்
(தச்சன்தோப்பு பிள்ளையார் கோயில்)

ஆலயகுரு : சிவஸ்ரீ ந. மகேஸ்வரக்குருக்கள்
(பன்றித்தலைச்சி அம்மன் கோயில்)

வர்ணவேலை : S. துரைசிங்கம்
(ஆட்ஸ்) கெருடாவில், சாவகச்சேரி.

அனைவரும் வருக! எம் பெருமான் திருவருள் பெறுக!

- ஆலய பரிபாலன சபை

ஸ்ரீஞானவைரவர் கோயில்,
கரவெட்டி. [87746]


## மஞ்சவனப்பதி ஆலயத்தில் திருட்டு

அரியாலை, ஜூன் 7

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆலயத்தில் இருந்த பெறுமதிமிக்க ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் பொருள்களைத் திருடர்கள் அபகரித்துள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து யாழ். பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-17)

# மேஜரின் கொலை தொடர்பாக சப்இன்ஸ்பெக்டர் விசாரணை

கொழும்பு, ஜூன் 7

சீனிகம என்னுமிடத்தில் இராணுவ மேஜர் டபிள்யூ. விதானபத்திரன சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் திங்களன்று நான்கு மணித்தியாலங்களாக விசாரிக்கப்பட்டதாக மெத்தியாகொட பொலீஸார் தெரிவித்தனர்.

கொலையுண்ட மேஜர், சப் இன்ஸ்பெக்டரின் விவாகரத்துப் பெற்ற மனைவியின் வீட்டிலிருந்து வந்த வேளை சுடப்பட்டிருந்தார்.

மேலும் விசாரணைகளுக்காக சப்இன்ஸ்பெக்டரை எதிர்வரும் திங்களன்றும் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளதாக பிரதம இன்ஸ்பெக்டர் லயனல் தெரிவித்தார்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (க)

## நல்லூரில் கலந்துரையாடல்

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முக்கிய கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் நல்லூர் செட்டித்தெரு, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் குறுக்கு வீதி, நாவல் வீதி, பருத்தித்துறை வீதி, கோவில் வீதி மக்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திருடர் தொல்லை குறித்தே இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி மக்களை மீளக் குடியமர்த்த படைத் தரப்பில் துரித நடவடிக்கை

## இதுவரை 3,324 குடும்பங்கள் அங்கு திரும்பின

யாழ்ப்பாணம்,ஜூன்7

தென்மராட்சிப் பகுதியில் இது வரை 3 ஆயிரத்து 324 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன என்றும் மேலும் பெரும் எண்ணிக்கையான குடும்பங்களை மீளக் குடியமர்த்த துரித நடவடிக்கை எடுக்கப் பட்டள்ளது என்றும் பலாலி பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள ளது.

இது தொடர்பாக பாதுகாப்புத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடம்பெயர்ந்த மக்கள் தங்களை மீளக்குடியமர்த்துமாறு படையினரிடம் கேட்டுக் கொண்டதையடுத்த அங்கு புலிகள் இயக்கத்தினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றி படிப்படியாக அவர்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேசம் புலிகளின கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது பொதுமக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களில் தற்காலிகமாக வசித்து வந்தனர். ஆனால் இப்பிரதேசங்களில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான கண்ணி வெடிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றுவதற்கு சுமார் 8 மாதம் வரை சென்றது.

இதன்பின்பு கடந்த 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு, கோவிலாக்கண்டி, சங்கத்தானை, சாவகச்சேரி வடக்கு, மட்டுவில், கைதடி, நுணாவில், தென்மட்டுவில், நுணாவில், மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு, மீசாலை வடக்கு, இராமாவில், வெல்லாம் போக்கட்டி, கச்சாய் போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளில் 3,324 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன. மேலும் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்காக முன் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பொதுமக்களை தமது நிரந்தர வசிப்பிடங்களில் மீளக் குடியமர்த்துவதை விரும்பாத புலிகள் இயக்கத்தினரும், அவர்களுக்கு உடந்தையாகச் செயற்படும் நபர்களும் இந்தத் திட்டத்தை சீர்குலைக்கும் நோக்கத்துடன் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

புத்திமிக்க குடாநாட்டு மக்களே, தங்களது அமைதியான வாழ்க்கை, தமிழ் கலாசாரம், பிள்ளைகளின் கல்வி போன்றவற்றை சீர்குலைத்துள்ள புலிகள் இயக்கத்தினர், ஒருபோதும் பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படுவதை விரும்புவதில்லை. இதற்குக் காரணம் தமிழ் இளைஞர், யுவதிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது அவர்களை இலகுவாக இயக்கத்தில் சேர்த்துக் கொண்டு இயக்கத் தலைவரின் சுக போகத்திற்காக பலி கொடுக்க முடியும் என்பதனாலேயே ஆகும்.

ஆகவே, புலிகள் இயக்கத்தினரும் தங்களுடைய உடைமைகளை சூறையாடும் நபர்களும் மேற்கொண்டு வரும் தவறான பிரசாரங்களை கேட்டு ஏமாறாதீர்கள். மரணம் உங்களை அரவணைத்துக்கொள்ளும்வரை அகதிமுகாம்களில் நீங்கள் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதே புலிகளின் நோக்கமாகும்.

எனவே, இயக்க உறுப்பினர்களின் தவறான நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டு அகதி வாழ்க்கையிலிருந்து விலகி, உங்களது நிரந்தர வசிப்பிடங்களில் மீளக் குடியேறி, அமைதியாக வாழக்கூடிய சூழ நிலையை உருவாக்கிக் கொள்ளவும். உங்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்குத் தம்மை அர்ப்பணித்து செயற்பட்டுவரும் அரசாங்கத்துக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

## பேச்சுக்கு முன் தடை நீக்கம் சாத்தியமான காரியமல்ல

கொழும்பு,ஜூன்7

பேச்சுக்கு முன்னதாக புலிகள் மீதான தடையை நீக்குவது சாத்தியப்படக்கூடிய காரியமல்ல.

- இவ்வாறு பொ.ஐ.முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம். ஜயரத்ன கூறியுள்ளார்.

புலிகள் முதலில் அரசுடன் பேச்சுக்கு வரவேண்டும். பேச்சுக்களின் முன்னேற்றங்களின் அடிப்படையில் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து ஆலோசிக்க முடியும் என்றும் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என புலிகள் முன்நிபந்தனை விதித்திருப்பது குறித்து அமைச்சர் டி.எம்.ஜயரத்னவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேச்சுக்கு முன்னதாக புலிகள் மீதான தடையை நீக்குவது சாத்தியப்படக்கூடிய காரியமல்ல.

இதனால், தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அரசுக்கு எதிரான நெருக்குதல்கள் உண்டாகலாம். புலிகள் பயங்கரவாத இயக்கம் என்பதை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் ஏற்றுக் கொண்டுள்ள இவ்வேளையில், பேச்சுவார்த்தைக்கு முன்னர் தடையை நீக்கக் கோருவது ஏற்றுக் கொள்ளமுடியாதது.

பேச்சுவார்த்தை ஆரம்பமான பின்னர் பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள், புலிகளின் நம்பகத்தன்மை இவற்றை நாட்டு மக்களுக்குத் தெளிவு படுத்துவதன் மூலம் அவர்களது தடைமட்டுமல்ல சில நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வது பற்றியும் சிந்திக்க முடியும் என்றும் அமைச்சர் டி.எம். ஜயரத்ன மேலும் தெரிவித்தார். (க)

## தையல் மெஷின்கள் அன்பளிப்பு

வடமராட்சி,ஜூன்7

'கியூடெக்' நிறுவனம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, தையல் பயிற்சி நிலையத்திற்கு இரண்டு தையல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடந்த வைபவத்தில் 'கியூடெக்' நிறுவனத்தின் சார்பில் அருட் தந்தை இருதயதாஸ் தையல் இயந்திரங்களை தையல் பயிற்சி நிலைய ஆசிரியையிடம் வழங்கினார். (க-182)

## ஆசிரிய கலாசாலையை வேறிடத்திற்கு மாற்ற எடுக்கும் முயற்சிக்கு ஆட்சேபம்

### வலி.வடக்கு பிரதேச சபை கூட்டத்தில் தீர்மானம்

வலி.வடக்கு,ஜூன்7

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மீண்டும் வலி.வடக்குப் பகுதியில் இயங்குவதற்கு வேண்டிய வசதிகளை வலி.வடக்கு பிரதேச சபை செய்து தரத் தயாராக உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை வேறு இடத்திற்கு மாற்ற எடுக்கும் முயற்சியை வலி.வடக்குப் பிரதேச சபை வன்மையாக ஆட்சேபிக்கின்றது.

வலி.வடக்குப் பிரதேச சபை திருமதி.பா.ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் கூடியபோது இது குறித்து ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மீண்டும் தனது சொந்தக் கட்டடத்தில் இயங்க அனுமதிக்க வேண்டும் எனவும், அதற்கு காலம் எடுக்குமாக இருந்தால் அதுவரை வலி.வடக்குப் பகுதியில் இயங்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

தீர்மானத்தின் பிரதிகள் உயர் கல்விப பணிப்பாளர் நிஹால் ஹேரத், வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜயவர்த்தன, யாழ்ப்பாணம் அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-86)

## கிராண்ட்பாஸ் பகுதியில் 3 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள் சிக்கியது!

### தமிழர், சிங்களவர் உட்பட ஐவர் கைது

கொழும்பு,ஜூன்7

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியிலுள்ள தமிழ்நாடு என்றழைக்கப்படும் வதுல்லவத்தையில் கடந்த திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் பொலீஸார் 3 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள்களைக் கைப்பற்றியதுடன் ஐந்து பேரையும் கைது செய்துள்ளனர்.

இரகசியத் தகவல் ஒன்றையடுத்து திங்கட்கிழமை இங்கு சென்ற போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் 2 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினைக் கைப்பற்றியதுடன் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

இதனையடுத்து செவ்வாய்க் கிழமை, வியாபாரிகள் போல் மாறு வேடத்தில் இப் பகுதிக்குச் சென்ற கிராண்ட்பாஸ் பொலீஸார் ஒரு வீட்டைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

அங்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப் பட்டதுடன் மூவர் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள ஐவரில் தமிழரும், சிங்களவரும் அடங்குவர். ஒருவர் போதைப் பொருள் விற்னை முதலாளி ஆவார். நீண்ட காலமாகவே இவர்கள் இத் தொழிலை செய்து வருவதாக பொலீஸார் தெரிவித்தனர். பைக்கற் பண்ணப்பட்ட நிலையிலேயே ஹெரோயின் கைப் பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் மாளிகாவததை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## வீதித் திருத்தத்தை நீடிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி கிழக்கு,ஜூன்7

பருத்தித்துறை - மருதங்கேணி வீதித் திருத்த வேலையை மேலும் மக்கள் குடியிருப்புக்கள் உள்ள இரண்டு கிலோ மீற்றருக்கு நீடிக்குமாறு கோரிக்கை விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற போதே இவ்வாறு கோருவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (க-182)

## பாடசாலையில் மலசலகூடங்கள்

சண்டிலிப்பாய்,ஜூன்7

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசட்) உதவியுடன் ஆண்களுக்கான பத்து மலசலகூடங்களும் பெண்களுக்கான ஆறு மலசல கூடங்களும் நிறுவப்பட்டு வருகின்றன. (க-135)

## பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தல் இன்று

# லண்டன் பிறென்ற் தெற்குத் தொகுதியில் இலங்கைத் தமிழர் செல்வராஜா வெல்வாரா?

இன்று நடைபெறவுள்ள இங்கிலாந்து நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் முதற்தடவையாக இலங்கைத் தமிழர் ஒருவர் முக்கிய கட்சியின் சார்பில் போட்டியிடுவது உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். உலகின் மிகப்பெரிய உதைபந்தாட்ட மைதானங்களில் ஒன்றாகக் கருதப்படும் லண்டன் வெம்பிளி ஸ்ரேடியம் அமைந்துள்ள பகுதியான பிறென்ற் தெற்குத் தொகுதியில் கொன்சவேட்டிவ் கட்சியின் சார்பில், தற்போது பிறென்ற் (BRENT) கவுன்சிலராக இருக்கும் செலவராஜா போட்டி இடுகிறார். இவரை லணடன் வாழ் தமிழர்கள் அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஆதரிக்கினறனர். இவரது வெற்றிக்காக பல தமிழச் சங்கங்கள் - ஒரு சில பழைய மாணவர் சங்கங்கள் - பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், பெரியோர்களும் இவரது வெற்றிக் காக உழைத்துவருகின்றனர். இத் தொகுதியில் இவரை எதிர்த்துப் போட்டியிடுபவர் தொழிற்கட்சி அரசில தற்போது அமைச்சராக இருக்கும் கறுப்பினத்தைச் சேர்ந்த போல் போட்டேங் (PAULBOTENG) ஆவார். இத்தொகுதியில் பெரும் எண்ணிக்கையான கறுப்பினததவர்கள் வாழ்வது இங்கு குறிப்பிடத்தக்கது. அதே வேளை பெரும எண்ணிக்கையான இந்தியர்களும், சுமார் 7 ஆயிரம் பேர் வரையான தமிழர்களும் அங்கு



பிரிட்டிஷ் நாடாளுமன்றம்.

வாழ்கிறார்கள். ஆனால் 2500 வரையான தமிழர்களே வாக்காளர் இடாப்பில் தங்களைப் பதிந்துள்ளனர் என்பது வேதனையான செய்தி. இங்குள்ள அனைத்துத் தமிழர்களும் தங்களைப் பதிந்திருந்தால் செல்வராஜாவின் வெற்றி உறுதியானது. தற்போது இத் தொகுதியின் சூழ்நிலை என்னவென்றால் 2 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் வாக்குகள் செல்வராஜாவுக்கு நிச்சயமாகக் கிடைக்கும்.

ஆனால் இவரது வெற்றியை நிச்சயிப்பவர்கள் ஆயிரக்கணக்கான இந்தியர்களே. ஏனெனில் கறுப்பினத்தவர் [illegible] கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. இந்தியர்கள் தொழில் கட்சிக்கே வாக்களித்துப் பழகிவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஆசியர் என்ற வகையில இந்தியர்கள் சிலவேளை செல்வராஜாவுக்கு வாக்களிக்கலாம். இவரைப் போலவே, போல் போட்டேங் அவர்களும் இம்முறை கடுமையான பிரசாரத்தில் இறங்கியுள்ளார். வழமையாக இவர் பிரசாரம் செய்யாமலே வெற்றிபெறுவது உண்மை. ஏனெனில் இவரை எதிர்த்து இவ்வளவு காலமும் வெள்ளை இனத்தவர்களே போட்டியிட்டனர். இம்முறையே இத்தொகுதியில் இரு கறுப்பினத்தவர்கள் களமிறங்கியுள்ளனர். 35 வீதமான வெள்ளையர்கள் வாழும் இத் தொகுதியில் வெள்ளையர்கள் வறுமையானவர்கள் என்பதால், அவர்களின் வாக்குகள் தொழில் கட்சிக்கே கிடைக்கும. ஆனால் இவர்களில் பெருமளவானர்கள் வாக்களிப்பதில்லை. செல்வராஜா பெருமளவான வெள்ளையர்களுக்கு சட்டத்தரணி என்ற வகையிலும் உதவியுள்ளார். அதனால் சில வெள்ளையர்கள் செல்வராஜாவுக்காக பிரசாரம் செயகின்றனர். மொத்தமாகச் சொல்வதானால் இத்தொகுதியின் வெற்றி தோலவியைச் சொல்வது கடினமானதே. இங்கு கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் இரு கட்சிகளின் தலைவர்களின் பிரசாரங்களும் கூட இவர்களின் வெற்றி தோல்வியை நிச்சயிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

வெள்ளிக்கிழமை அதிகாலை முடிவுகள் யாவும் தெரிந்துவிடும் அதுவரை பொறுப்போம்,

லண்டனிலிருந்து
சுதா

ஈழத்தமிழர்கள் செல்வராஜாவின வெற்றியை எதிர்பார்க்கின்றனர். தமிழின உணர்வாளரான இவர் தமிழீழ விடுதலைக்காகவும் குரல் கொடுப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தொகுதிக்கு கொன்சவேட்டிவ் கட்சி சார்பில் அபேட்சகராக இவர் தெரியப்பட்டதே ஒரு சாதனைதான். ஏனெனில் இத்தேர்வுக்கு 49 பேர் இக்கட்சியின் சார்பில் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 30 பேர் முதல் முறையும், 15 பேர் இரண்டாம் முறையும், 5 பேர் மூன்றாம் முறையும் தெரிவாகினர். கடைசி 5 பேர்களும் தலைவருடன் இணைந்த 4 பேரின் கேள்விகளுக்குப் பதிலளித்த பின்னரே அதில் ஒருவர் தேர்வாவார். அந்த 5 பேர்களில் செல்வராஜாவே தெரிவானார் என்றால் அவரது திறமையை எண்ணிப்பாருங்களேன். ▲

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

NEW MODEL SONY (QW3), COLOUR T.V 21'', PANASONIC SR 38 டெக், XB 5 150W PANASONIC ரேடியோ செற் மற்றும் கடைப்பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரி, மேசை மற்றும் BROWNS ELECTRIC WATER PUMP, 5 அடி நீளமான சீற் (கூரை) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சிவா, கம்பளை இல்லம், வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (88725)

நல்ல நிலையிலுள்ள "பெயின்ரிங கொம்பிறசர்" (அனைத்துப் பாகங்களும் அடங்கியது) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். கரன், காரைக்கால் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். (88729)

புத்தம் புதிய-கிறீம் ஹவுசுக்குரிய-பொருள்கள் கொம்பிறசர், பாத், டிபிறசர், மின் இயந்திரம், 10 H.P. திறிபேஸ் டீசல் இயந்திரம் (லண்டன்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: R.V.G, நவாலி கிழக்கு, நவாலி. (88750)

## தவறிவிட்டது

பரமசிவம் கஜேந்திரன் என்பவருடைய வி.அ.அ. (இல.0902003367), தே.அ.அ. என்பன அச்செழுவுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் மத்தி கிராம முன்னேற்ற சங்கத்தில் ஒப்படைக்கும் வணணம் கேட்டுக்கொள்கிறேன். (88730)

இராசலிங்கம் நடராஜகுமார் என்பவரது மில்லேன், பிரம்படி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியுடைய விசேட அ.அட்டை, (இல.0902024166), தேவாலய வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியுடைய தேசிய அ. அட்டை (இல. 632720700V) என்பன 02.06.2001 அன்று கொக்குவிலுக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மில் லேன், பிரம்படி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88747)

பன்னாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா கிருபாலசிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை (இல. 631102999V), விசேட அ.அட்டை (இல. 0907018722) என்பன 02.06.2001 அன்று புன்னாலைக்கட்டுவன் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (88751)

## வேலையாள் தேவை

கோழிகள், ஆடுகள், பூந்தோட்டம் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. உடன் நேரில் வரவும். தொடர்பு:- தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (88741)

## திருமண சேவை

எம்மிடம் எல்லாவித மணமக்களும் உண்டு. பழைய தொடர்பாளர்கள் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (88749)

## இலக்கியக் கட்டுரைகள்

இந்த நூல் மாணவர்களை விட ஆசிரியர்களுக்கே கற்பித்தலுக்குக் கூடுதலாகப் பயன்படும். எல்லா வகை இலக்கியங்களையும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய கட்டுரைகள் அல்லவா? வாங்கி வாசித்துப் பயனடையுங்கள். (88666)

## ENGLISH CLASSES

G.C.E. A/L 2002, 2003 ஆங்கில பாட வகுப்புகள் - 3ஆம் பிரிவு உடன் ஆரம்பமாகின்றது. பாடசாலைகளில் A/L புதிய பாடத்திட்டம் கற்பித்த ஆசிரியரினால் நடத்தப்படும். திரு.அரியரட்ணம், 16, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி. (88759)

## விளையாட்டு உபகரணங்கள்

வடமராட்சி கிழக்கு,ஜுன்7

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 14 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

அண்மையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதம்பிள்ளை தலைமையில் இந்த வைபவம் இடம்பெற்றது. (க-182)

---

## சுழிபுரம் - பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

### மகா சங்காபிஷேகம்

மேற்படி ஆலய மகா சங்காபிஷேகம் நாளை (08.06.2001) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் நடைபெறும். முருகப்பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் சண்முகப் பெருமானுக்கு நவோத்தர சங்காபிஷேகமும் சண்முகா அர்ச்சனை, நண்பகல் மகேஸ்வர பூசை ஆகியனவும் நடைபெறும். விசேட நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்.

*அடியார்கள் திரண்டுவந்து முருகன் அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.*

*பறாளாய் முருகன் ஆலயம், சுழிபுரம்.* (C/17011) **-சங்காபிஷேக சபை.**

---



உ

பரமேஸ்வரி அம்பாள் துணை

## கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**அம்பிகை அடியார்களே!**

கோவையம்பதியில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாளுக்கு விஷு வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் இன்று (07-06-2001) வியாழக்கிழமை மூல நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில், காலை 6.31 மணி முதல் 8.04 மணி வரை உள்ள சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்த திருவருள் கூடியிருப்பதால் அம்பிகை அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

*கும்பாபிஷேக பிரதம குரு:*
சிவஸ்ரீ சோ.நடராஜக்குருக்கள் (நல்லூர்)

*சர்வசாதம்:*
பிரம்மஸ்ரீ தாணு மகாதேவா சோமசுந்தரக்குருக்கள்
(காயத்திரி பீடம் - இணுவில்)

*ஆலய பிரதம குரு:*
பிரம்மஸ்ரீ ச.செம்பொற் சோதீஸ்வரசர்மா (கோப்பாய்)

*ஆசியுரை:*
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

*தெய்வீகப் பேருரைகள்:*
1. மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம)
2. திரு.ஜெ.கோகலை (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)

*குறிப்பு :-* கும்பாபிஷேக நிகழ்வுகளின் நேர்முக வர்ணனை ஒலிப்பதிவு செய்யப்பட்டு இரவு 9.30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்.சேவையில் ஒலிபரப்புச் செய்யப்படும். ***பரிபாலன சபை***

*கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துபவர்கள்*

**ஏகாம்பரம் புடைவையகம்**
பெரியகடை, யாழ்ப்பாணம்

**மலர் புடைவையகம்**
இல.181, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**ராகம் பட்டுச் சோலை**
நவீன சந்தை, யாழ்ப்பாணம். (88760)

---

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**Dr. தம்பிஜயா அருமைத்துரை R.M.O.**

பாடசாலைச் சமூகம் அன்போடு அழைக்கும் எங்கள் பாடசாலை வைத்தியரின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம். (88754)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் நல்லாசிரியரான திருமதி ரோகிணி குலசிங்கம் அவர்களின் சகோதரர்

**அமரர் சிவசம்பு சிவயோகேஸ்வரன்**

*(ஓய்வுபெற்ற பிரதம பிரதி தபால் அதிபர், யாழ்ப்பாணம்)*

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்
பாடசாலை பழைய மாணவர் சங்கமும்.
(88756)

---

# வாசகர் திருமுகம்

## மருத்துவ மாணவர்களுக்கு

புத்திஜீவிகள், கல்விமான்களின் வெளியேற்றம் எம் பிரதேசங்களை, நாட்டைப்பொறுத்த வரை ஈடுசெய்யமுடியாத இழப்பேயாகும். இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி, வெளிநாடுகளிலிருந்து கொண்டு கிடைக்கும் நன்மைகளை விட, இங்கிருந்து கொண்டு பணிபுரிவது இன்னும் பன்மடங்கு பயன்களையும், திறன்களையும் பெற்றுத்தரும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையே ஆகும்.

எமது பிரதேசங்களில் உள்ள அன்றாட நெருக்கீடுகள், பிரச்சினைகள் பற்றி எல்லாம் எங்கெங்கு பேசப்பட்டு, ஆராயப்படுகிறதோ அங்கெல்லாம் மருத்துவத்துறையின் பங்கு இன்றியமையாத, அத்தியாவசியமான ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.

இம்மருத்துவத்துறையின் பல்வேறுபட்ட தற்காலச் சிக்கல்களை நோக்குகின்ற வேளையிலே, வைத்தியர்களின் பற்றாக்குறை மிக முக் கிய பிரச்சினையாக - குறிப்பாக எமது பிரதேசங்களில் நின்று நிலவு கின்றது.

ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய 60, 70 வைத்திய மாணவ, மாணவியர் எமது யாழ்.மருத்துவபீடத்தில் படிப்பை முடித்துக் கொண்டு வைத்தியர்களாக வெளியேறுகின்றனர். வைத்திய நிபுணர்களின் பற்றாக் குறையினால் 5 வருடக் கல்வியை இவர்கள் 7, 8 வருடங்களில் முடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதன் பின்னர் நாட்டின் சூழ்நிலை, குடும்ப நிலை, உயர் கல்வி காரணமாக எமது பிரதேசங்களை விட்டு தென்பகுதிக்கும், வெளிநாடுகளுக்கும் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள்.

இருப்பினும், எமது பிரதேசங்களில் கொஞ்சக்காலமாவது வைத்தியப் பணி புரிவது, தமது சமூகத்தின்பால் இவர்களுக்குள்ள பாரிய கடப்பாடாகும் என்பதை இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

"ஓரிரு வருடங்களாவது இங்கு கல்வி பயிலும் வைத்தியர்கள் எம்மத்தியில் பணிபுரிந்தால் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம்" என்று அடிக்கடி ஆதங்கத்தோடு சுட்டிக்காட்டுவார் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்.

2000ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னார் மாவட்ட பெரியாஸ்பத்திரியில் பணிபுரிய, வைத்தியர்களின் தேவைகள் நிறைய இருந்தும் 17 வைத்தியர்கள் பணிபுரிந்த நிலையில் 16 தென்பகுதி வைத்தியர்கள் திடீரென தென்பகுதிக்குச் சென்றவேளையில் அவ்வைத்தியசாலை ஒரே ஒரு வைத்தியருடன் ஒரு சில நாள்கள் குற்றுயிராய்த் துடித்துக் கொண்டி ருந்தது. இத்தனைக்கும் இம் மாவட்டத்தைச் சேர்ந்த 3, 4 மாணவர் களாவது ஒவ்வொரு வருடமும் படிப்பை முடித்து வெளியேறுகிறார்கள்.

வருங்கால எம் வைத்திய மாணவ மாணவியர் இதனைக் கருத்திற் கொண்டால் எம் பிரதேசங்களில் நிலவும் 'வைத்தியர் பற்றாக்குறை' தீரா விடினும், எம் பகுதிகளில் சில இடங்களில் நிலவும் 'வைத்தியர் இல்லாக்குறை'யாவது நீங்கும்.

**ஆன்மகுரு**
*புனித வேளாங்கண்ணி ஆலயம்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

## தொல்லை தரும் தொலைபேசிகள்

யாழ். நகரில் கடந்த கால அனர்த்தங்களால், எம்மைப் பெற்று வளர்த்த தாய் தந்தையர்கள், இனம் சனம் மற்றும் ஏனையோர்களை பிரிந்து நாட்டின் நாலா பக்கத்திலும் சிதறுண்டு வாழ்ந்துவருகின்றோம். பிறந்த மண்ணை விட்டுப்பிரிய மனம் இல்லாதவர்கள் பலர் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எமது உற்றார், உறவினருடன் கடித மூலமாக அல்லது தொலைபேசி மூலமாக தொடர்புகளை ஏற்படுத்தலாம் என்றால் பல சிரமங்களுக்கு மத்தியில் தான் அவை சாத்தியமாகின்றன. கடிதங்களை அனுப்பினால், சில தொலைந்தும், சில கிழிந்தும், சில மாதக்கணக்கில் தாமதித்தும் போய்ச்சேருகின்றன. அங்கு செயற்படும் தொலைபேசி அழைப்பு மூலம் தொடர்பை ஏற்படுத்தலாம் என்றால் காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை எத்தனை முறை முயன்றாலும் முயற்சிகள் முயற்கொம்பாகி விடுகிறது. சில நேரம், குறிப்பாக மாலை 8.00 மணிக்குப் பின் ஓரளவு வசதியாகத் தொடர்புகளைப் பெறக்கூடியதாக இருக்கிறது. இப்படியான நேரத்தில் அனேகமான கொமினிக்கேசன் உரிமையாளர்கள் கதவுகளைப் பூட்டிவிட்டு, வீடு சென்று விடுவார்கள். தவிர இரவு 9.00 மணிக்குப் பின் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால், தெருக்கள் எல்லாம் சனநடமாட்டம் இல்லாது வெறிச்சோடிப்போய் விடுகிறது. பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்த நேர்ந்தால், அடிக்கடி துண்டிக்கப்பட்டும், சில நேரங்களில் இரைச்சலாகவும் இருக்கிறது. தொலைபேசிக் கோபுரம் முன்பு ஆனையிறவில் இருந்த காலத்தில், உரையாடல்கள் மிகவும் தெளிவாகவும், விரைவாகவும் செயல்பட்டு வந்ததை நாம் மறக்கமுடியாது. ஆனால் தற்போது உள்ள நிலையில் அதிகரித்த பாவனையாளர்களின் குறைபாடுகள், கோரிக்கைகளை சமாளிக்க முடியாத. நிலையில், பிராந்திய தொலைபேசி முகாமையாளர்கள் இருப்பதாக அறிகின்றோம். இது விடயமாக தொலைபேசி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் பிரதேச முகாமையாளருடனும், ஈழமக்கள் ஜனநாயக முன்னணியின் செயலகத்தில் நிஷாந்தனையும் சந்தித்துப் பாவனையாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்ததாகவும் அறியக்கிடக்கிறது. அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு பெருந் தொகையான நிதி தேவைப்படுகிறதாம், இதனை வடபகுதி அபிவிருத்திப் புனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்களுக்கான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனத்தில் எடுத்து மக்களுக்கு உதவ வேண்டும்.

*கொழும்பு* *இடம்பெயர்ந்தோர் சார்பாக*
**எஸ்.ஆர்.சுப்பிரமணியம்**

---

மின்னல் -2-

மாணவர்களே!

வெளிவந்துவிட்டது!

மாதாந்த பொது அறிவு சஞ்சிகை

*ஆசிரியர் :-* **சின்னத்தம்பி பத்மராஜன்**

விலை ரூ. 20/=

- ✦ தரம் 5 முதல் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றது.
- ✦ அனைத்து புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
- ✦ மாணவர் போட்டி முடிவு திகதி :- 30-06-2001

(88754) - பிரதிக்கு முந்துங்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் விவேகமற்ற செயல்களே இயற்கையின் சீற்றத்துக்குக் காரணம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா கடந்த சிவராத்திரி தினத்தன்று ஆற்றிய உரையில் சூழலுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகள் குறித்தும் எடுத்துரைத்தார். அந்தப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

மனிதன் தன் ஆசைகள் மேல் முதலில் ஒரு கட்டுப்பாடு வைக்க வேண்டும். மனிதனது ஒழுக்கம் கெட்டு, வக்கிரமாகிப் போனதால்தான், இயற்கையும் சீற்றம் கொண்டு அழிவுகள் நேர்கின்றன. குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டதை பற்றி நீங்கள் அறிவீர்கள். அதனால் ஏற்பட்ட அழிவைப் பற்றியும் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆயிரக் கணக்கானோர் தங்கள் உயிரை விடும்படி நேரிட்டது. இவற்றுக்கெல்லாம் காரணம் மனிதனுடைய அதிகமான ஆசைகள்தான்.

## சாயிசிந்தனை


இறைவன் தனது படைப்பில் மிகவும் சரியான அளவுகளைத்தான் பயனபடுத்தியிருக்கிறான். இறைவனது படைப்பில் பூமியும், கடலும் ஒன்றுக்கு ஒன்றுக்கு இசைவாக சமநிலையில் இருக்குமாறுதான் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

ஆனால் மனிதனோ எவ்வித தராதரமும் இல்லாமல் தனது பேராசையினால் பூமியைத் துளைத்து எல்லா இடத்திலிருந்தும் எண்ணெய் (பெற்றோலியப் பொருள்கள்) எடுக்க முயல்கிறான். தினந்தோறும் தொன் கணக்கில் சமுத்திரங்களிலிருந்து மீனகள் பிடிக்கப்படுகின்றன. இவ்வாறு விவேகம் இன்றி செயற்படுவதால், இயற்கையின் சமநிலை தவறிவிடுகிறது. அது பூமியிலும் பரவி மனித உயிர்கள் பழிவாங்கப்படுகின்றன.

மனிதன் எப்போது இத்தகைய 'கம்பத்'திலிருந்து (நிலைபிறழ்தல்) விடுபடுகின்றானோ அப்போதுதான் பூகம்பத்தினால் பாதிக்கப்படமாட்டான். பாரத நாட்டவர் மட்டுமல்ல, உலகம் முழுதும் உள்ள மக்களும் இயற்கையின் சமநிலை பாதிக்கப்படாமல் நடந்து கொள்ளவேண்டும். பஞ்சபூதங்களும் (நிலம்,நீர்,காற்று, ஆகாயம், நெருப்பு) தெய்வீகத்தின் வெளிப்பாடுகளே! இந்த உண்மையை மனிதன் உணர்ந்து கொண்டு அதற்கேற்ப நடக்கும்போதுதான் அவனது வாழ்க்கை பாதுகாப்பானதாக அமையும்.

### குஜராத்பூகம்பம்

அரிசி, பருப்பு ஆகியவற்றை குஜராத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பி வைத்தேன். சிலர் கேட்டனர் "சுவாமி! தாங்கள் ஏன் இவ்வளவு பணம் செலவழித்து உதவிப் பொருள்களை குஜராத்திற்கு அனுப்பவேண்டும்? நீங்கள் பூகம்பம்



வராமல் தடுத்திருக்கலாமே" நான் பதில் கூறினேன். "என் அன்புக்குரியவனே! மனிதன் பூகம்பங்களுக்காகத் தன்னைத்தானே பழித்துக் கொள்ள வேண்டும். செல்வத்திற்கான அதிகமான பேராசையால் அவன் பூமியில் சமநிலையைக் குலைக்கிறான் இதனாலேயே பூகம்பம் ஏற்படுகிறது. இது இயற்கையின் சட்டம். தேவையானவர்களுக்கு உதவி செய்து நீ மனித குலத்தின் மேல் இருக்கும் அன்பை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் அன்பு உனது இயல்பு. இயற்கைக்கு எப்படி சமநிலை அவசியமோ, அங்ஙனமே, அன்பு மனிதனுக்கு மிகவும் தேவையானது.

### நன்மை

கடவுள் படைத்திருப்பவை அனைத்தும் உன் நன்மைக்கே என்று புரிந்துகொள். உனது தேவைக்கு ஏற்ப இயற்கையை அனுபவிக்க வேண்டும் உனது பேராசைக்காக இயற்கையின் வழங்களை கொள்ளையடித்தல் தவறு.

இங்கே ஓர் உதாரணம் - ஒரு பேராசைக்காரனிடம், தினம் ஒரு தங்க முட்டை இடும் வாத்து இருந்தது. ஒருமுறை பொறுமை இழந்து வாத்தின் வயிற்றைப் பிளந்து ஒரே நேரத்தில் பல தங்க முட்டைகளைப் பெற்றுவிடலாம் என அவன் முயன்றான்.

இன்றைய மனிதனும் அத்தகைய முட்டாள் தனமான பேராசை மிகுந்த செயல்களில் ஈடுபடுகிறான். இயற்கை என்ன தருகிறதோ அதில் திருப்தி அடையாமல், அவன் மேலும் மேலும விரும்புகிறான். அதன் மூலம் இயற்கையின் சமநிலையைப் பாதிக்கிறான்.

### அறிவியல்

இன்று விஞ்ஞானிகள் புதிய கண்டுபிடிப்புக்களில் மிகவும் தீவிரமாக இருக்கின்றார்கள். அறிவியலும் தொழில்நுட்பமும் வளரவளர இயற்கையின் சமச்சீரும் கெடுகிறது. இதன் விளைவாக பூகம்பங்கள் உருவாகின்றன. பருவகாலத்தில் மழை பெய்வதில்லை. அறிவியல் தேவையான அளவுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும் அறிவியலுக்கு என்று சில எல்லைகள் உண்டு. எல்லைகளைத் தாண்டும்போது அது ஆபத்தை விளைவிக்கிறது.

**தொகுப்பு: கரன்**

நீங்கள் இன்னும் அதிக தூரம் பயணிக்க வேண்டும். சத்தியத்தையும் தருமத்தையும் ஒட்டி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

இயற்கை வளங்களை சரிவர பயன்படுத்துங்கள்; அவற்றை வீணாக்காதீர்கள்; அனைவருக்கும் உதவுங்கள்; அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க இயன்றதை செய்யுங்கள்; நீங்கள் கற்ற எல்லா விடயங்களையும் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள் இதுதான் உங்களது முதனமையான கடமை. ❐

# எமக்காகவும் எல்லோருக்காகவும் சுற்றாடலைப் பேணிடுவோம் வாரீர்!

நமது சுழல் என்பது நமது வீட்டிலேயே ஆரம்பிக்கிறது. வீட்டையும் அதன் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருந்தால்தான் இந்த உலகையும் சுத்தமாக வைத்திருக்க முடியும். நம்மைச் சுழவுள்ள காற்று, சலசலத்து ஓடும் நதிகள், அலைகள் வீசி ஆரவாரிக்கும் கடல்கள், குளங்கள், ஏரிகள், வாவிகள், நிலத்தடி நீர், நமக்குணவளிக்கும் நிலப்பரப்புக்கள், காடுகள் போன்ற இயற்கையின் பகுதிகள் யாவும் நமது சுற்றாடல் ஆகும். இந்த அற்புதமான சூழல் - தெய்வீகமான இயற்கை - இன்று மாசுபடுத்தப்படுகின்றது. மனிதனின் திட்டமில்லாத அவசரமான செயற்பாடுகளின் காரணமாகவே சூழலின் இயற்கைச் சமநிலை குழம்புகிறது; மாசுபடுகிறது. இதனால் துன்பத்திற்குள்ளாவது அவன் மாத்திரமல்ல, இயற்கையையே நம்பியிருக்கும் மற்ற விலங்கினங்களும்தான்.

உலகச் சுற்றாடல் தினத்தை ஜூன் 5இல் நாம் கொண்டாடுகிறோம். அதேவேளையில் எவ்வகையான பிரச்சினைகள் நம்மைச் சூழ்ந்துள்ளன, அவற்றில் எவ்வகையானவை எமக்கு நீண்ட காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சிந்தித்து, அவற்றுக்குரிய நடவடிக்கையை எடுப்பது அடுத்த சந்ததியினருக்கு நாம் செய்யும் ஒரு பெரிய தொண்டாகும்.

சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய ஆய்வுகள் பல நாடுகளில் பல காலமாகச் செய்யப்பட்டுவந்துள்ளன; அவற்றின் அடிப்படையில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இருந்தபோதிலும் மிக அண்மையில் உலகரீதியாக நடத்தப்பட்ட ஆய்வின பயனாகச் சுற்றாடல் தொடர்பாகப் பத்துப் பிரச்சினைகளை இனங் கணடுள்ளனர்.

சுற்றாடல் பிரச்சினை என்பது, தனி மனித சுற்றாடல், குடும்பச் சுற்றாடல், சமூகச் சுற்றாடல், பொருளாதாரச் சுற்றாடல், அரசியல் சுற்றாடல், உலகளாவிய சுற்றாடல் என்ற ஆறு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இவைகளை அடிப்படையாகக் கொண்டு அணுகப்பட்டபோதே பத்துப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

1) சூழல் மாசுபடல்.
2) வளி வெப்பநிலை உயர்வடைதல் (பச்சை வீட்டுத் தாக்கம்)
3) அமில மழை பெய்தல்.
4) கடலின் நீர்மட்டம் உயர்தல்.
5) ஓசோன் படை குறைவுபடல்.
6) காடுகள் தீப்பற்றல்.
7) சனத்தொகை வளர்ச்சி உயர்வடைதல்.
8) பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலம் தோன்றுதல்.
9) வறிய சமுதாயம் தோற்றுவிக்கப்படல்.
10) அரசியல் ஆதிக்கம்.

இலங்கையில் சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய எண்ணமும் அதைப் பற்றிய கவனிப்பும் 1979 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இருப்பினும் 1981ஆம் ஆண்டுதான் இலங்கையின் அரசியல் சட்டத்தில் சுற்றாடல் பற்றிய கொள்கையும் சேர்க்கப்பட்டது.

1980ஆம் ஆண்டில் சுற்றாடல் தொடர்பான விடயங்களை நாடளாவியரீதியில் கவனிப்பதற்காக சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை அமைக்கப்பட்டது. இதன் பின்னர் 1981ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டுவரை பத்து வருட காலத்தில் சுற்றாடல் சம்பந்தமான பல விழிப்புணர்வுகளும் கருத்துப் பரிமாற்றங்களும் ஏற்படல் ஆயின. சட்டரீதியாக அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை. 1990ஆம் ஆண்டில் மாகாண சபைகள் அமைக்கப் பட்ட பின்னர் சுற்றாடல் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

சுற்றாடல் மாசுபடல் என்பதைப் பற்றிப் பலரும் அறிவார்கள். ஆயினும் இன்று நமது பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான வாகனங்கள் மிகப் பழையவை; ஜப்பான் போன்ற நாடுகளில் பாவனைக்கு உதவாது என்று ஒதுக்கப் பட்டவை இங்கு மறு அமைப்புச் செயயப்பட்டு (**Re - Conditioned**) பயன் படுத்தப்படுகின்றன.

கால நேரங்களில் வரிசையாகச் செல்லும் 'லொறிகள்' மிகத் தாராளமாகக் கரும் புகையைக் கக்கிக் கொண்டு செல்கின்றன. மோட்டார் சைக்கிள்கள் புகையைச் சுழலவிட்டுச செல்கின்றன. கார்களும் அப்படியே! தெருவில் செல்லும் எவரும் இக்கரும் புகை மண்டலத்துள் மறைந்து போவார்கள்; அப்படி இருக்கும்போது சவாசிக்காமல் இருக்க[illegible] வாகனங்கள் வெளிவிடும் புகையில் காபனீரொட்சைட்டு வாயு இருக்கிறது. இது மனிதனின் இரத்தத்தை உறையச் செய்யக்கூடியது; சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடியது. இந்த மெதுவான அனர்த்தத்தைப் பொறுப்பானவர்கள் எவரும் கவனித்ததாகத் தெரியவில்லை!

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவிடப்படும் புகையும் சுற்றாடலை மாசுபடுத்துகின்றது; வளி மாசடைவதால பல நோய்கள் உண்டாகின்றன. இப்போது பலநாடுகளில் தொழிற்சாலைகளிலிருந்து உயர்ந்த புகைபோக்கிகள் மூலம் வெளிவிடப்படும் கழிவு வாயுக்களும் தூசுகளும் நிறைந்தபுகை வடிகட்டப்படுகிறது அல்லது சுழற்சி முறையில் பயன்படுத்தப்படுகிறது. இம்முறைகளை அனைத்துத் தொழிற்சாலைகளும் பின்பற்றினால் வளிமாசடைதல் தவிர்க்கப்படலாம்.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், எண்ணெய்கள் எல்லாம் ஆறுகளில் கலந்து கடலை அடைகின்றன. இதனால் நன்னீர் ஆறுகள் மாசுபடுகின்றன; கடலும் மாசுபடுகின்றன; மீன்கள் அழிகின்றன. கப்பல்களின் போக்குவரத்து அதிகரித்துள்ள இக்காலத்தில், அவற்றின் எண்ணெக் கழிவுகளாலும் கடல் மாசடைகின்றது.

சில வேளைகளில் எண்ணெயைக் கொண்டுசெல்லும் கப்பல்கள் உடைந்து அவ்வளவு எண்ணெயுமே கடலில் மிதந்து பல கிலோ மீற்றருக்குப் பரவுகின்றன. இது கடல் வாழ் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாகும்; கரையோரச் சூழலும் பாதிககப்பட்டு துர்நாற்றம் வீசுகிறது. இவற்றிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் கவனம் எடுக்கப்படல் வேண்டும்.

**உலகம் முழுவதும் சுற்றாடல் பாதுகாப்புச் சம்பந்தமாக மக்களைச் சிந்திக்க வைப்பதற்காக உலக சுற்றாடல் தினம் 05.06.2001 இல் கொண்டாடப்பட்டது. எமது சூழலை நாம் பேணிப் பாதுகாக்காது விட்டால் மனிதன் வாழ முடியாத இடமாக இந்தப் பூமித் தாய் மாறி விடுவாள். வெப்மேறிக் கொண்டிருக்கும் எமது பூமித்தாயை மர நடுகை மூலம் குளிர்விப்போம்.**

வளி வெப்பநிலை உயர்வடைந்திருப்பதுபற்றி இப்போதெல்லாம் பலரும் பேசிக்கொள்கிறார்கள். சில தசாப்தங்களுக்குமுன் இப்படி இல்லையே; இப்போது ஏன் இந்த மாற்றம் என்று வியக்கின்றார்கள். இதற்கு வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்துக்கொண்டு [illegible] தாவரங்கள் பகலில் [illegible] ஒளியில் உணவு உற்பத்தியைச் செய்கின்றன. இதற்கு காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன. இந்த ஒட்சிசன் முனித சுவாசத்திற்கும் மற்றும் உயிர்களின் சுவாசத்திற்கும் பயன்படுகிறது. மனிதனும் மற்றும் உயிரினங்களும் வெளிவிடும காபனீரொசைட்டு தாவரங்களுக்குப பயன்படுகிறது.

மனிதன் காடுகளை வகை தொகையின்றி அழிக்கின்றான். விறகுக்காக, வெட்டுமரங்களுக்காக, சேனைப் பயிர்ச செய்கைக்காக, குடியேற்றத்திற்காக எனப் பல காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன. எது எப்படி இருப்பினும் காபனீரொட்சைட்டை பெருமளவில் உள்ளெடுக்க வேண்டிய மரங்கள் இவ்வாறு அழிந்து விட்டபடியால் காபனீரொட்சைட்டின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிக்கிறது (ஒட்சிசனின் பற்றாக்குறையும் ஏற்படுகிறது). காபனீரொட்சைட்டு வளிமண்டலத்தில் பெருமளவு இருப்பதால் வளியின் வெப்பநிலையும் அதிகரிக்கிறது; வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக வடதுருவம் தென்துருவத்தில் கடலில் மிதந்து கொண்டிருக்கும் பெரும் பனிக் கட்டிகள் (**Ice Bergs**) உருகத் தொடங்குகின்றன. இதனால் எதிர்காலத்தில் கடல்மட்டம் 15 அடி வரை உயரக் கூடும்; அப்போது 300க்கும் மேற்பட்ட சிறு தீவுகள் நீருக்கடியில் போய்விடும்; கடல் அரிப்பு ஏற்பட்டு கடல்நீர் நாட்டுக்குள் வந்துவிடும். பூமித்தாய் சூடேறும்போது இந்த அனர்த்தங்கள் ஏற்படும்.

## உலக சூழல் தினம் செவ்வாயன்று அனுஷ்டிக்கப்பட்டது

சூழலைப் பாதுகாக்க நாம் செய்யக்கூடியது மரம் நடுகைத் திட்டமாகும, நல்ல மரங்களை நாற்று மேடைகளில் உண்டாக்கி மற்றவர்களுக்குக் கொடுப்பதோடு நாமும் தகுந்த இடங்களில் நட்டுப் பேணி வளர்க்க வேண்டும். தாவரக் கன்றுகளை வளர்ப்பதில் அனைவரின் ஒத்துழைப்பும் தேவை.

நாம் பல தேவைகளுக்காகப் பல பெரிய மரங்களை வெட்டுகிறோம். இதனால் -

- ★ மழை வளம் குன்றிவிடும்.
- ★ மண்வளம் அற்றுப்போகும்.
- ★ மண்ணரிப்பு ஏற்படும்.
- ★ நிலம் பாலைவனம் ஆகும்.
- ★ நீர் நிலைகள் வற்றிவிடும்.
- ★ இருக்க இடமில்லாமல் போய் விடும்.
- ★ நிற்க நிழல் இல்லாமல் போய்விடும்.
- ★ உணவுப் பற்றாக்குறை ஏற்படும்.

இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். நாம் தாவரங்களையே நம்பி வாழ்கிறோம் என்பதை மறந்துவிடல் ஆகாது.

நாம் எத்தனையோ மரங்களை வெட்டி இருக்கிறோம். எத்தனை மரங்களை நட்டு வளர்த்தோம் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

வல்லை வெளியில் காற்றுத் தடுப்பு வலயமாக (Wind-break Zone) சவுக்கு மரங்கள் வரிசையாக நடப்பட்டன. அவற்றின் கிளைகளை அவ்வப்போது யாரோ வெட்டிக்கொண்டே இருக்கிறார்கள். சில வேளைகளில் மரம் முழுவதுமாக கீழே சாய்ந்து காய்ந்து கிடக்கும். இதைக் கவனிப்பார் யாருமில்லை. அவை வெட்ட வெட்ட முளைத்துக்கொண்டிருக்கின்றன.

★ ஒரு மரத்தை வெட்டினால் ஒன்பது மரம் நடவேண்டும்.

★ பெருவிருட்சங்களை எமது முன்னோர் நட்டு வளர்த்துவிட்டுச் சென்றனர்; அவற்றை வெட்டுவதற்கு நமக்கு என்ன உரிமை? அவற்றின் நிழலில்தானே நாம் வாழுகிறோம். இவற்றைப் பேணுவதோடு அடுத்த சந்ததிக்காக நாமும் நல்ல மரங்களை உண்டாக்கி வைக்கவேண்டும்.

**இர.சந்திரசேகர சர்மா**

★ கலிபோர்னியாவில் ஆயிரம் வருடங்களுக்குமேலும் வாழுகின்ற மரங்கள் பருத்து உயர்ந்து நிற்கின்றன. இவற்றை இராட்சத மரங்கள் (**Giant trees of California**) என்பார்கள்.

★ நமது பண்பாடு மரங்களோடு பின்னிப்பிணைந்து கோயில்களைச் சுற்றி ஸ்தல விருட்சங்கள் நிற்கின்றன. இடங்களைக் குறிப்பிடுவதற்கு, அரசடி, ஆலடி, இலுப்பையடி, மாவடி, வேம்படி என்றும் குறிப்பிடுவார்கள்.

★ விறகுக்காக வெட்டும் மரங்களுக்குப் பதிலாக வேறு மரங்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிரான நிலைப்பாடு; ஜனாதிபதிக்கு தேரர் புகழாரம்

கொழும்பு,ஜூன்7

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நியாய மற்ற கோரிக்கைகளை நிராகரித்து ஜனாதிபதி குமாரதுங்க எடுத்திருக்கும் உறுதியான நிலைப்பாட்டினை அஸ்கிரிய பீடத்தின் பதிவாளரான வண. பேராசிரியர் வரகவே ஸ்ரீ தம்மாலோக நாயக்க தேரர் புகழ்ந்துள்ளார்.

ஞாயிறன்று கம்பொல என்னுமிடத்தில் உலகப் புகழ்பெற்ற பமியான் புத்தர் சிலைக்கான அடிக்கல் நடும் விழாவில் தேரர் மேற்கண்டவாறு ஜனாதிபதிக்கு புகழாரம் சூட்டினார்.

அடிக்கல்லை நட்டு உரையாற்றிய ஜனாதிபதி, வேலுப்பிள்ளை பிரபாகரனின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கு தானோ, தனது அரசோ பணிந்துபோகப் போவதில்லை. எந்தக் கட்டத்திலும் தனது அரசாங்கத்தின் மீது அனைத்துச் சமூகத்தினரும் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு துரோகமிழைக்கப் போவதில்லை எனத்தெரிவித்தார்.

அங்கு பேசிய தம்மாலோக தேரர், 'விடுதலைப் புலிகளை கிறிமினல்கள் என இனங்கண்டிருக்கும் இந்நாள்களில் ஜனாதிபதியின் கூற்று பொருத்தமானதே. அமெரிக்காவும், கனடாவும், பிரிட்டனும் புலிகளை பயங்கரவாதிகள் என்று இனங்கண்டு, நிதி சேகரிப்பையும், வேறும் செயற்பாடுகளையும் தடைசெய்திருக்கும் இவ்வேளையில் ஸ்ரீலங்கா அவர்கள் மீதான தடையை நீக்குவது எவ்வாறு?' - என்று கேள்வி எழுப்பினார். விடுதலைப் புலிகளுக்கெதிரான போர், அவர்கள் ஆயுதங்களையும். தனியரசுக்கான கோரிக்கையையும் கைவிடும்வரையும் தொடர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-20)

## நாட்டில் பெருகிவரும்
# ஓரினச் சேர்க்கையாளர்களால் பொலீஸாருக்கு நெருக்கடிகள்

கொழும்பு, ஜூன்7

இலங்கையின் குற்றவியல் சட்டத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் விதத்தில் ஓரினச் சேர்க்கையாளர்களின் அமைப்பை உருவாக்கி, செயற்படுவது தொடர்பாக பொலீஸார் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றவியல் சட்டத்தின் கீழ் இவ்வாறான அமைப்பை உருவாக்குவதும் அந்தஅமைப்பு செயற்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

தொண்டர் நிறுவனங்களாக உருவாக்கப்பட்ட இந்த அமைப்புகளால் இந்த நாட்டின் கலாசாரத்திற்கு பெரும் அச்சுறுத்தல் உருவாகியுள்ளது என மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இவ்வாறான ஓரினச் சேர்க்கையாளர்களின் அமைப்பொன்றுக்கு அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள் மற்றும் பெண்களின் அமைப்புகளால் விருதுகள் வழங்கபபட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான அமைப்புக்கள் நாடெங்கும் உருவாகும்மேயாயின் மிகவும் பாரதூரமான நிலைமை உருவாகலாம். அரசின் பொறுப்பான பிரிவினர் இந்தக் கலாசாரச் சீரழிவு குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பொலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)


யா/புங்குடுதீவு

**ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்**

**தமிழ்த்தினமும புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் - 2001**

காலம் : இன்று (07-06-2001) வியாழக்கிழமை காலை 10.00 மணி

இடம்: பாடசாலை பிரதான மண்டபம்

தலைவர் : திரு.எஸ்.சண்முகலிங்கம்- அதிபர்

பிரதம விருந்தினர்: **திரு. ந.மதனராஜா J.P., U.M.** அவர்கள்
(முன்னாள் நா.உ. பிரதேசசபைத் தலைவர் - ஊர்காவற்றுறை; பிரதி அமைப்பாளர், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி)

சிறப்பு விருந்தினர்கள்: **திரு.த.தவராசா** அவர்கள்
(முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் - தீவகக் கல்வி வலயம்)

**திரு.சோ.தில்லைநாதன்** அவர்கள
(உதவிக் கல்விப்பணிப்பாளர் - வேலணைக் கோட்டம்)

**திரு.ந.கருணாகரகுருமூர்த்தி J.P., U.M.** அவர்கள்
(தலைவர், வேலணை பிரதேசசபை)

கௌரவ விருந்தினா : **திரு.செ.இரத்தினம்** அவர்கள்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.**

விளம்பர அன்பளிப்பு:

**சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்**

இல. 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/17007)


## விபுலானந்தர் நினைவு தின கட்டுரைப் போட்டி

வலி.தெற்கு,ஜூன்7

எதிர்வரும் ஜூலை மாதம் 19ஆம் திகதி நடைபெற உள்ள சுவாமி விபுலானந்தர் நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரைப்போட்டியொன்று நடைபெறஉள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றம் இப்போட்டியை நடத்தவும், முதலிடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கவும் முன் வந்துள்ளது.

கட்டுரைப் போட்டிகள் தரம் 6 முதல் 9வரை ஒரு பிரிவாகவும் தரம் 10 முதல் 13 வரை மற்றொரு பிரிவாகவும் நடைபெற உள்ளன.

சகல கட்டுரைகளும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி மன்றத்தினருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் சிறந்த கட்டுரைக்கு முதல் பரிசாக தலா 2000 ரூபா வழங்கப்படும். இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பாராட்டு பெறும் கட்டுரைகளையும் பெறுவோருக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். (க-152)

## தனிச் சிங்களத்தில் பொலீஸ் அறிக்கை

தென்மராட்சி,ஜூன்7

பொலீஸ் நிலையங்களில் முறைப்பாட்டுப் பிரதிகள் தனிச் சிங்களத்தில் வழங்கப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த வேளையில் மோட்டார் சைக்கிளுக்குரிய சான்றிதழ்களைக் கைவிட்டு வந்த ஒருவர் இவ்வருடத்திற்குரிய வாகன வரி செலுத்துவதற்கு விண்ணப்பத்துடன் பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அறிக்கையைப் பெறச் சென்ற போது தனிச் சிங்களத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

---

## எமக்காக.....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடாவிட்டால் எதிர்காலத்தில் விறகுக்காக அதிகதூரம் செல்ல வேண்டி வரும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி அடையும் நமது போன்ற நாடுகளிலும் மனித நடத்தையாலேயே சுற்றாடல் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதில் ஒரு விழிப்புணர்வு தோன்றலே உலக சுகாதார ஸ்தாபனமும் மற்றும் சுகாதார அமைப்புக்களும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. மனிதனுடைய வாழ்வு முன்னேற்றமடைய, உலகம் பயன் அடைய, உடல் நலம் பாதுகாக்கப்பட்டு நாம் வாழ சுற்றாடலைப் பாதுகாப்போம் எனநாம் உறுதி எடுத்துக் கொள்வோமாக!

"உலகளாவிய ரீதியில் சிந்தியுங்கள்; நீங்கள் இருக்கும் இடத்திலேயே செயற்படுங்கள்"

(THINK GLOBALLY AND ACT LOCALLY)


# நெஞ்சம் மறக்குமா?
எம் குடும்பத் தேரின் அச்சாணி!

மலர்வு 16 - 05 - 1936



உதிர்வு 03 - 04 - 2000

திருமதி
**கனகம்மா துரைராசா**
(கரவெட்டி)

பூவிரிதல் போல் வளர்ந்த போது .... நல்ல
பொருள் சொல்லி, புதிர்வாழ்வை வெல்லப்பண்ணி
காசு புகழால் கிடைக்காப் பேரின்பத்தைக்
காண வைத்த தாயே .... நின் கழல்கள் போற்றி!

'கனகம்மா இல்லம்'
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

உங்களிடம் ஆசிவேண்டும்:
து.அருந்தவசீலன் (மகன்)
அ.நீலறோஜினி (மருமகள்)

(88691)



# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அரியகுட்டி சித்திரவடிவேலு**
(உரிமையாளர், குகன் ஸ்ருடியோ, சாவகச்சேரி)

அன்னை மடி 23 - 10 - 1927 ஆண்டவன் அடி 20 - 05 - 2000

திதி: துதியை (07.06.2001)

தீயினில் எம் தேகம் தீய்ந்த பின்பும்
தீருமா அப்பா உங்கள் நினைவுகள்!

குகன் ஸ்ருடியோ,
சாவகச்சேரி. (C-16991)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**குகதாஸன் புவனேஸ்வரி**
தம்பதிகள்

| | | |
|---|---|---|
| 18.10.1923 | தோற்றம் | 13.09.1931 |
| 29.05.2000 | மறைவு | 19.05.2000 |
| 18.05.2001 | திதி | 07.06.2001 |

முன் சென்ற அம்மா முகந்திரும்பி நிற்கையிலே
பின் சென்றழைத்து இணைந்து சென்ற பப்பாவே!
அன்பின் அர்த்தத்தை அறிய வைத்த பெற்றோரே!
உங்கள் நினைவில் ஓராண்டு நிறைந்துவிட
எங்கள் நினைவில் எக்காலும் நிலைத்திடுவீர்!

விஜயகுமார் மீரா குடும்பம்,
(ஆஸ்திரேலியா)
முகுந்தன் தபோதினி குடும்பம்,
(வவுனியா)
சகோதரர்கள் குடும்பம்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(88590)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 - 05 - 1924



உதிர்வு 08 - 05 - 2001

எமது பாடசாலை அதிபர்
**திரு.ப.பூரணானந்தன்**
அவர்களின் அருமைத் தாயார்
**திருமதி தங்கம்மா பரிபூரணம்**

அவர்கள் 08-05-2001 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையுமாறு பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்,
கரவெட்டி.

(C/17003)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேபாளத்தில் மன்னர் பிரேந்திரா மற்றும் அரச குடும்பத்தினர் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்தக் கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பொலீஸாரையும், ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்த தீயில் எரியும் கடைகளையும், மறைந்த மன்னர் பிரேந்திரா, ராணி ஐஸ்வர்யா ஆகியோரின் புகைப் படங்களை வைத்து பொதுமக்கள் வழிபடுவதையும், நீதி விசாரணை கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களையும் (இடமிருந்து வலமாக) படங்களில் காணலாம்.

## நேபாள அரச குடும்பப் படுகொலைகள் விவகாரம்:

# விசாரணைக் குழுவில் பங்கேற்க எதிர்க்கட்சித் தலைவர் மறுப்பு!

## கிளர்ச்சியைத் தணிக்கும் முயற்சியில் சிக்கல்!!

காத்மண்டு,ஜூன்7

**நேபாள மன்னர் பிரேந்திரா உட்பட அரச குடும்பத்தினர் கொலை செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்த புதிய மன்னர் ஜியானேந்திராவால் நியமிக்கப்பட்ட குழுவில் அங்கம் வகிக்க எதிர்க்கட்சித் தலைவர் மாதவ் குமார் நேபாள் மறுத்துவிட்டார். இதனால் பொதுமக்கள் கிளர்ச்சியைத் தடுக்கும் முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.**

அரச குடும்பக் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்த பிரதமர்தான் விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும், புதிய மன்னர் அல்ல என்று நேபாள கம்யூனிஸ்ட் கட்சி கருதியதாலேயே, அக்கட்சியைச் சேர்ந்த மாதவ்குமார் நேபாள் விசாரணைக்குழுவில் அங்கம் வகிக்க மறுத்துள்ளார்.

முன்னதாக, நேபாள உச்ச நீதிமன்ற நீதியரசர், மக்களவைச் சபாநாயகர், எதிர்க்கடசித் தலைவர் ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழுவை அமைத்த புதிய மன்னர் மூன்று நாள்களுக்குள் இந்தக்குழு முடிவை வெளியிடும் என்று தெரிவித்திருந்தார். அந்தக்குழு நேற்று முன்தினம் விசாரணைகளை தொடங்கியதாகவும் இன்று முடிவுகளை வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

அரச குடும்பத்தவரின் படுகொலைகள் குறித்து சந்தேகம் கொண்டு கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்களை, இந்த நடவடிக்கை அமைதிப்படுத்தும் என்று கருதப்பட்டது.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரின் முடிவால் மீண்டும், மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (ஒ)

## மன்னர் மறைவுக்கு ஐ.நாவில் துக்க தினம்

நியூயோர்க்,ஜூன்7

நேபாள மன்னர் பிரேந்திராவின் மறைவையொட்டி, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் உத்தியோகபூர்வ துக்கதினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஐ.நா. சபையின் கொடி அப்போது அரைக் கம்பத்தில் பறந்தது. சபையில் அங்கம் வகிக்கும் 189 நாடுகளின் கொடிகள் அன்று ஏற்றப்படவில்லை.

(ஒ-6-9)

## தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவான இயக்கங்களைத் தடை செய்க!

### வாஜ்பாயிடம் ஜெயலலிதா கோரிக்கை

புதுடில்லி,ஜூன்7



தமிழ் நாட்டில் தற்போது செயற்படும் தமிழர் விடுதலை இராணுவம், தமிழின உரிமை மீட்பு இராணுவம் ஆகிய இரண்டையும் தடை செய்ய வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயராம் ஜெயலலிதா இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் வேண்டியுள்ளார்.

மேற்படி இரு அமைப்புகளும் தமிழ் நாட்டின் அமைதிக்கும் பொதுவாக இந்தியாவின் அமைதிக்கும் பங்கம் விளைவிப்பதாகும் என்பதனையும் முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு விளக்கிக் கூறியுள்ளார். செல்வி ஜெயலலிதா தமிழக முதலமைச்சரான பின்னர் புதுடில்லிக்கு விஜயம் செய்து பிரதமர் வாய்பாயைச் சந்தித்து தமிழக அரசியல் நிலை குறித்து விரிவாகப் பேசிய போதே அவர் இவ்வாறு வேண்டினார். தமிழர் விடுதலை இராணுவம், தமிழின உரிமையை மீட்டெடுக்கும் இராணுவமாகிய இரு அமைப்புக்களும் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான அமைப்புகள் என்று தமிழகப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

(ஐ)

## தனூப் ஆற்றங்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட

# யூகோஸ்லாவியப் புதைகுழிகளை தோண்டத் தோண்டச் சடலங்கள்!

பெல்கிரேட்,ஜூன்7

யூகோஸ்லாவியாவின், தனூப் ஆற்றங்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருநது அதிக எண்ணிக்கையில் கொசோவா அல்பேனியர்களின் சடல எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

முன்னாள் அதிபர் சொலொபொடான் மிலோசெவிக்கை, யுத்தக் குற்றங்களுடன் தொடர்பு படுத்தும் சான்றுகளைத் தேடும் நடவடிக்கையாகக் கருதப்படும் இந்தப் பணிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை 86 பேரது சடல எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் ஆகியோரது சடல எச்சங்களே அதிக அளவில் உள்ளதாகவும் -

கொசோவா விடுதலை இராணுவத்தினர் சிலரது சடல எச்சங்களும் காணப்படுவதாகவும் -

உடைகளையும், சீருடைகளையும் அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதா கவும் சேர்பிய உள்துறை அமைச்சர், டுலான் பிறெலெவிக் தெரிவித்தார்.

மிலோசெவிக் ஆட்சிக்காலத்தில் தனூப் ஆற்றங்கரையில் அல்பேனியர்களின் சடலங்கள் மீட்கப்பட்ட போதும், அவற்றை அதிகாரிகள் மூடி மறைத்திருந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம், யூகோஸ்லாவியப் பத்திரிகை ஒன்றே இதனை அம்பலப்படுத்தியிருந்தது.

யூகோஸ்லாவியாவில் அல்பேனியர்கள் பெரும்பான்மையாக வாழும் கொசோவாவை தனிநாடாகக் கோரியும் அல்பேனியர்கள், மிலோசெவிக் தலைமையிலான செர்பிய அரசின் ஆட்சிக்காலத்தில் மிக மோசமான இன ஒழிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

கடந்த ஆண்டு தேர்தலில் மிலோசெவிக்கின் ஆட்சி முடிவுக் குக் கொண்டுவரப்பட்டு [illegible] டுனிகா தலைமையிலான [illegible] அரசு பதவியேற்றது.

இதனைத் தொடர்ந்து, யுத்தக் குற்றங்களுக்கான ஹேக் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு மிலோசெவிக் உள்ளாக்கப்பட வேண்டும் என்று சர்வதேச சமுகம் கோரி வருகிறது. (ஒ)

### ஐ.நா. ஊழியர் கோரிக்கை

உலகின் பல்வேறு நாடுகளில் பணிபுரியும் ஐ.நா.பணியாளர்கள் தமது பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டுமென்று ஐ.நா.பாதுகாப்புச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1992ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை சுமார் 200 ஐ.நா. ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருந்த போது கொல்லப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். (ஒ-6-9)

### கருணாநிதியின் 78ஆவது பிறந்தநாள்

தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க.தலைவருமான மு.கருணாநிதியின் 78ஆவது பிறந்த நாள் எளிமையான முறையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்பட்டது.

தி.மு.க.ஆட்சியில் இருந்த போது கவியரங்கம், பட்டிமன்றம் என வெகு விமரிசையாக கருணாநிதியின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ் தேவாலயத்தில் குண்டுவெடிப்பு; 10 பேர் பலி!

டாக்கா,ஜூன்7

பங்களாதேஷில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றில் குண்டு வெடித்ததில் 10 பேர் உயிரிழந்தனர்; 16 பேர் காயமடைந்தனர்.

தெற்கு பங்களாதேஷின் பனியச்சார் பகுதியில் உள்ள மிஷன் தேவாலயத்திலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

ஞாயிற்றுக்கிழமையாதலால், தேவாலயத்தில் வழிபாட்டுக்காக அநேகம் பேர் கூடியிருந்த போதே குண்டு வெடித்துள்ளது.

குண்டு வெடிப்பில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே 10 பேரம் உயிரிழந்துள்ளனர். அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ பங்களாதேஷிகள் ஆவர்.

இஸ்லாமிய நாடான பங்களாதேஷில் கிறிஸ்தவ மத விழிபாட்டுத் தலம் ஒன்றில் குண்டு வெடிப்பு நிகழ்ந்திருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## தெற்காசிய யுத்த நிறுத்தம் குறித்த

# அரபாத்தின் அறிவிப்பை 'ஹமாஸ்' நிராகரிப்பு!

காயா,ஜூன்7

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அறிவித்திருந்த யுத்த நிறுத்தத்தை ஹமாய் அமைப்பு உட்பட பலஸ்தீன தீவிர வாத அமப்புக்கள் நிராகரித்துள்ளன.

கடந்த வாரம், இஸ்ரேலிய தலைநகர் டெல் அவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 17 பேர் பலியானதையடுத்து அரபாத் இந்த யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தார்.

மேற்குக்கரை மற்றும் காஸா பகுதியில் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக நடைபெறும் இஸ்ரேலிய, பலஸ்தீன மோதல்களை முடிவுக்குக கொண்டுவரும் முயற்சியாகவே இந்த அறிவிப்பை அரபாத் வெளியிட்டிருந்தார்.

ஆனால் யுத்த நிறுத்த அறிவிப்பை நிராகரித்துவிட்ட ஹமாஸ் இயக்கத்தினர், இஸ்ரேலியர்கள் மீது தாம் தொடர்ந்து தாக்குதல்களை- குறிப்பாக தற்கொலைத் தாக்குதல்களை நடத்தப் போவதாக தெரிவித்துள்ளனர்.

[illegible] மீதான இராணுவ நடவடிக்கைக்குத் தமது இராணுவம் தயாராக உள்ளதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் கூறியுள்ளார்.

ஆனாலும் அரபாத்தின் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு மதிப்பளிக்கும் விதமாக பலஸ்தீனப் பகுதிகள் மீதான தடைகளை இஸ்ரேல் தளர்த்தியுள்ளது. இதனால் எண்ணெய் மற்றும் உணவுப் பொருள்களை பலஸ்தீனப் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல இருந்த கட்டுப்பாடுகள் நீங்கியுள்ளன.

இந்த நிலையில், ரஷ்யா, ஜேர்மன், துருக்கி, ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள், அமைதி முயற்சி குறித்து ஆராய பலஸ்தீனப் பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர்.

(ஒ-6-9)

## பலஸ்தீனர்களின் கல்வீச்சில் 6 மாதக் குழந்தை படுகாயம்

காஸா,ஜூன்7

மேற்குக்கரைப் பகுதியில் பலஸ்தீனர்கள் நடத்திய கல்வீச்சில் 6 மாதக் கைக்குழந்தை ஒன்று படுகாயமடைந்தது.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யூத இனத்தைச் சேர்ந்த குழந்தையும் அதன் பெற்றோரும் காரில் வந்து கொண்டிருந்ததாகவும் -

அப்போது, பலஸ்தீன இளைஞர்கள் அடங்கிய கும்பல் ஒன்று கவண் மூலம் கல்வீச்சு நடத்தியதாகவும்-

அப்போது, காரின் கண்ணாடியை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற கல் ஒன்று குழந்தையைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் - இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது. (ஒ-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சேவைக்கு வருமாறு விடுத்த அழைப்பை ஜானக பெரேரா நிராகரிப்பு!

கொழும்பு,ஜூன்7

வடக்கு-கிழக்குப் பகுதியில் அனைத்து படை நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக ஓய்வுபெற்ற இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை நியமிப்பது குறித்து அரசுதரப்பு ஆலோசித்து வரும் நிலையில் அந்தப் பதவியை ஏற்கப் போவதில்லை என மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 'அக்கினிச் சுவாலை' படை நடவடிக்கையில் ஏற்பட்ட பாரிய பின்னடைவைத் தொடர்ந்தும் தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எழுந்துள்ள முட்டுக்கட்டையை அடுத்தும் யுத்த முனையில் படை நடவடிக்கையை உஷார்படுத்தும் நோக்கில் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை விஷேட அதிகாரங்களின் கீழ் மீண்டும் இராணுவத்தில் சேர்ப்பது குறித்து அரசுதரப்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க மற்றும் சில முக்கிய அமைசசர்கள் இவரை, வடக்கு - கிழக்கில் இனிமேல் நடைபெறவுள்ள அனைத்துப் படை நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக நியமிப்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இவர்களது அழைப்பை நிராகரித்துள்ள ஜானக பெரேரா, 'அரசியல்வாதிகளுடன் வேலை செய்வதை நான் வெறுக்கிறேன். ஏனென்றால் அவர்களுடன் வேலை செய்வதில் எனக்கு மிக மோசமான அனுபவங்கள் உள்ளன' எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள இவர் இந்த வாரம் ஆஸ்திரேலியா செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சாவகச்சேரியில் புதைத்து வைத்த பெறுமதிமிக்க தங்க நகைகள் மீட்பு

## படைத்தரப்பில் அறிவிப்பு

தென்மராட்சி இடம்பெயர்வின் போது தமது வீட்டில் புதைத்து வைத்துவிட்டு வந்த தங்க நகைகளை, குடும்பப் பெண் ஒருவர் படையினரின் ஒத்துழைப்புடன் மீட்டுச் சென்றுள்ளதாக யாழ்.பாதுகாப்பு தலைமையகம் அறிவித்துள்ளது.

சாவகச்சேரி வடக்கு பெரிய அரசடி வீதியில் வசித்து வந்த திருமதி யோகேஸ்வரி என்பவரே ஐந்து தங்கச் சங்கிலிகள், ஒரு தாலிக் கொடி, இரு மோதிரங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக எடுத்துச் சென்றிருந்தார் என்று படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினர் தென்மராட்சியில் பல இடங்களை புலிகளிடம் இருந்து மீட்ட பின்னர் அப்பகுதியில இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களைப் பார்வையிட்டு தாம் புதைத்து வைத்த பொதிகளை மீட்டுச்செல்வதில் ஈடுபட்டுள்ளனர் என்றும், தங்க நகைகளை மீட்டுச்சென்ற திருமதி யோகேஸ்வரி படையினருக்கு தமது நன்றியைத் தெரிவித்துள்ளார் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)


சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபையினரின்

## கண்ணீர் அஞ்சலி

அமரர் வைத்திய கலாநிதி

### த.அருமைத்துரை

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபை உறுப்பினரும் வைத்திய கலாநிதியுமான அமரர் த.அருமைத்துரை அவர்களின் திடீர் மரணம் குறித்து ஆழ்ந்த துயருகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு அருள்மிகு முருகமூர்த்தி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபையினர்*

(88748)



## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி அருணோதயக் கல்லூரி

பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்

### செல்வி சீதாதேவி கந்தையா

(முன்னாள் ஆசிரியை, அருணோதயக் கல்லூரி)

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், *அருணோதயக் கல்லூரி, அளவெட்டி.*

நிர்வாகசபை உறுப்பினர், ப.மா.ச., அளவெட்டி.

(88744)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 25 - 02 - 1954

ஆண்டவன் அடியில் 07 - 05 - 2001

### செல்வி கோகிலராணி கந்தையா

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தவளே!
காற்றாகி இன்று ஏன் கடிதில் பிரிந்துவிட்டாய்?
சொல்லாமல் கொள்ளாமல் நீ எங்கே போனாய்?
சொர்க்கம் தான் நாடிச் சென்றனையோ?
உன்னங்கிள் கதற ஏங்கித் துடிக்கின்றோம்
எம் உள்ளக் குமுறலை வந்து தீர்க்காயோ?

*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.* (88739)

உன் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.


## பிக்குவுக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜூன்7

கடவத்த பகுதியில் உள்ள புராதன விகாரை ஒன்றில் இருந்து வெண்கலப் புத்தர் சிலை ஒன்றினைத் திருடியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட பிக்கு ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா மஜிஸ்திரேட் ர்ணசிங்க உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி புத்தர்சிலை மீண்டும் விகாரையின் மதகுருவான ஞானரத்னதேரரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.(ஐ-7)

## கந்தரோடை ஆலயத்தில் மகோற்சவம்

வலி.தெற்கு,ஜூன்7

கந்தரோடைக் கிராமத்தில் மிகப் பழைமை வாய்ந்த வற்றாக்கை விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலய மகோற்சவவிழா முதன் முறையாக இவ்வருடம் ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

மேற்படி ஆலய புனருத்தாரண வேலைகள் முடிவுற்று அண்மையில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மகோற்சவம் நடைபெறுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மகோற்சவத்துக்கு அவசியமான கொடித் தம்பம் புதிதாகச் செய்யப்பட்டுள்ளது.

உற்சவத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலைத் துப்புரவாக்கும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாலயத்தைச் சேர்ந்த இந்து இளைஞர் மன்றத்தினரும், இளைஞர்கள், பொதுமக்கள் அனைவரும் வெகு உற்சாகமாக சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாதத்தில் ஆலய மகோற்சவம ஆரம்பமாக உள்ளது. (க-152)

## நயினாதீவு ஆலயச் சூழலில் சிரமதானம்

வேலணைப் பகுதி அபிவிருத்தி தொண்டர்களினால் நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய சுற்றாடல் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை - நெடுந்தீவில் நெடுந்தீவு துறைமுகம் மற்றும் அதன் சுற்றாடல் பகுதியும் நெடுந்தீவு பகுதி அபிவிருத்தித் தொண்டர்களினால் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டது.

தீவுப்பகுதி அபிவிருத்தி தொண்டர்களுக்குரிய பயிற்சி வகுப்புக்கள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தற்போது அவர்களுக்கு ஆன்மீக உளவியல் வகுப்புக்கள் மற்றும் ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதாக தீவக அபிவிருத்தி இணைப்பாளர் இ.ஜெயால்ட் அன்ரனி தெரிவித்தார். (க-73)

## 11 பொலீஸார் இடைநிறுத்தம்

உரிய அனுமதியின்றி விடுமுறையில் சென்ற குற்றத்திற்காக ஓர் இன்ஸ்பெக்ரர் உட்பட 11 பொலீஸார் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கண்டி தலதா மாளிகையில் கடமையில் ஈடுபட்டிருந்த இவர்கள் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறியதையடுத்தே செவ்வாய்க்கிழமை மேல் மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவினால் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட 11 பேரில் நால்வர் இன்பெக்ரர்கள், ஒருவர் சப் இன்பெக்ரர், நால்வர் ரிசேவ் பொலீஸார் மற்றவர்களில் ஒருவர் [illegible] தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 5ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| (183816ஏ) | (185785ஏ) | (185785பி) |
| (189936ஏ) | (189937ஏ) | (189937பி) |

### கரவெட்டி

| | | |
|---|---|---|
| (176177ஏ) | (176177பி) | (176489ஏ) |
| (181302ஏ) | (181302பி) | (181302சி) |
| (181302டி) | (181338ஏ) | (181338பி) |
| (181366ஏ) | (182286ஏ) | (183644ஏ) |
| (185344ஏ) | (185344பி) | (185344சி) |
| (185344டி) | (185578ஏ) | (185595ஏ) |
| (185595பி) | (185595சி) | (185595டி) |
| (185808ஏ) | (185808பி) | (188252ஏ) |
| (188252பி) | (188372ஏ) | (188471ஏ) |
| (188506ஏ) | (188506பி) | (188515ஏ) |
| (188531ஏ) | (188567ஏ) | (188572ஏ) |
| (188572பி) | (188572சி) | (189860ஏ) |
| (189863ஏ) | (189874ஏ) | (189876ஏ) |
| (189913ஏ) | (189913பி) | (189913சி) |
| (189915ஏ) | (189939ஏ) | (189939பி) |
| (189950ஏ) | (189950பி) | (189971ஏ) |
| (189973ஏ) | (189973பி) | (189973சி) |
| (189973டி) | (190066ஏ) | (190111ஏ) |
| (190111பி) | (190111சி) | (190112ஏ) |
| (190112பி) | (190122ஏ) | (190122பி) |
| (190122சி) | (190129ஏ) | (190129பி) |
| (190180ஏ) | (190180பி) | (190184ஏ) |
| (190184பி) | (190203ஏ) | (192500ஏ) |
| (192516ஏ) | (192577ஏ) | (192578ஏ) |
| (192578பி) | (192578சி) | (192578டி) |
| (192589ஏ) | (192615ஏ) | (192641ஏ) |
| (192834ஏ) | (193887ஏ) | (193934ஏ) |
| (193934பி) | (193934சி) | (193934டி) |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (177860ஏ) | (177860பி) | (177860சி) |
| (181052ஏ) | (181052பி) | (181052பி) |
| (183550ஏ) | (183550பி) | (183550சி) |
| (183550டி) | (183550ஈ) | (183623ஏ) |
| (185504ஏ) | (185596ஏ) | (185596பி) |
| (185616ஏ) | (185710ஏ) | (185806ஏ) |
| (188483ஏ) | (189825ஏ) | (189825பி) |
| (189825சி) | (189825டி) | (189951ஏ) |
| (189981ஏ) | (189983ஏ) | (189990ஏ) |
| (190001ஏ) | (190002ஏ) | (190021ஏ) |
| (190038ஏ) | (190077ஏ) | (190077பி) |
| (190077சி) | (190077டி) | (190119ஏ) |
| (190125ஏ) | (190125பி) | (190125சி) |
| (190127ஏ) | (190127பி) | (190127சி) |
| (190127டி) | (190127ஈ) | (190127எவ்) |
| (190127ஜி) | (190161ஏ) | (190161பி) |
| (190161சி) | (190161டி) | (190161ஈ) |
| (190168ஏ) | (190168பி) | (190188ஏ) |
| (190196ஏ) | (190213ஏ) | (190130ஏ) |
| (190249ஏ) | (190299ஏ) | (190299பி) |
| (190299சி) | (190299டி) | (192652ஏ) |
| (192692ஏ) | (192702ஏ) | (192702பி) |
| (192702சி) | (192702டி) | (192702ஈ) |
| (192732ஏ) | (192812ஏ) | (192812பி) |
| (193804ஏ) | (193841ஏ) | (193841பி) |
| (193855ஏ) | (193859ஏ) | (193915ஏ) |

இம்மாதம் 6ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

| | |
|---|---|
| (183583ஏ) | (183583பி) |

### கரவெட்டி

| | | |
|---|---|---|
| (184008ஏ) | (184008பி) | (185485ஏ) |
| (185746ஏ) | (185746பி) | (185746சி) |
| (185746டி) | (188238ஏ) | (188238பி) |
| (188377ஏ) | (188468ஏ) | (188468பி) |
| (188468சி) | (188468டி) | (188546ஏ) |
| (188546பி) | (189864ஏ) | (189864பி) |
| (189883ஏ) | (189883பி) | (189883சி) |
| (189895ஏ) | (189895பி) | (189907ஏ) |
| (189991ஏ) | (189992ஏ) | (189992பி) |
| (189995ஏ) | (190059ஏ) | (190059பி) |
| (190098ஏ) | (190101ஏ) | (190137ஏ) |
| (190137பி) | (190137சி) | (190149ஏ) |
| (190149பி) | (190149சி) | (190150ஏ) |
| (190150பி) | (190150சி) | (190150டி) |
| (190151ஏ) | (190151பி) | (190160ஏ) |
| (190180ஏ) | (190205ஏ) | (190205பி) |
| (190207ஏ) | (190237ஏ) | (190275ஏ) |
| (190288ஏ) | (192505ஏ) | (192505பி) |
| (192506ஏ) | (198419ஏ) | (198419பி) |
| (198419சி) | (198419டி) | (198420ஏ) |
| (198420பி) | | |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (158294ஏ) | (158294பி) | (169584ஏ) |
| (169584பி) | (183760ஏ) | (188511ஏ) |
| (188511பி) | (189904ஏ) | (189904பி) |
| (189984ஏ) | (190071ஏ) | (190080ஏ) |
| (190080பி) | (190080சி) | (190087ஏ) |
| (190116ஏ) | (190116பி) | (190116சி) |
| (190116டி) | (190116ஈ) | (190116எவ்) |
| (190116ஜி) | (190132ஏ) | (190132பி) |
| (190170ஏ) | (190178ஏ) | (190178பி) |
| (190178சி) | (190178டி) | (190193ஏ) |
| (190197ஏ) | (190216ஏ) | (190224ஏ) |
| (190235ஏ) | (190250ஏ) | (190258ஏ) |
| (190258பி) | (190258சி) | (190276ஏ) |
| (190276பி) | (190277ஏ) | (190286ஏ) |
| (195885பி) | (196885ஏ) | |

(க-10)


உ

## கருகம்பனை கவுணாவத்தை வயிரவர் கோயில் பொங்கல் விழா

09-06-2001

**மேற்படி ஆலயப் பொங்கல் விழா எதிர்வரும் (09.06.2001) சனிக்கிழமை - இம்முறை, கோயிலின் தெற்கு வீதியில் பாதுகாப்பு அரணுக்கு வெளியில் அதிகாலை 5.00 மணிக்கு நடைபெறும். இப்பொங்கலுக்குச் செல்வோர் மணலடைப்பு அண்ணமார் கோயில் வீதியூடாகவும், மயிலங்கூடல் ஞானவயிரவர் கோயில் வீதியூடாகவும் செல்ல முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.**

**- நிர்வாகம்.**

(88742)



## 31 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணுலகில் 13 - 11 - 1925

விண்ணுலகில் 08 - 05 - 2001

### அமரர் சின்னப்பொடி சின்னவன்

(கைதடி தெற்கு)

அன்புடன் அரவணைத்து ஆறுதல் தந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவுநாளில் - அவரது *ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.*

*'மகேசா வாசா', நூலக வீதி, கைதடி தெற்கு, கைதடி.*

- மனைவி, பிள்ளைகள் *மற்றும்* குடும்பத்தினர்.

(88743)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் விடாப்பிடியாகக் காட்டிவரும் பாரபட்சத்துக்கு டாக்டர்கள் கடும் கண்டனம்

விசேட கொடுப்பனவு வழங்குவதில் அரசு காட்டி வரும் விடாப்பிடியான போக்குக்கு ஆட்சேபம் தெரிவித்து வடக்கு—கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதனை ஒட்டி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளை விடுத்துள்ள அறிக்கை இது.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற, முன்னர் கடமையாற்றிய தென்னிலங்கை வைத்திய அதிகாரிகளுக்கு மட்டும் அரசாங்கம் Special Mission Allowance என்ற விசேட மேலதிக கொடுப்பனவை ஜனவரி 2000 தொடக்கம் வழங்கி வருகின்றது.

இதே பகுதியில் கடமையாற்றுகின்ற ஏனைய வைத்திய அதிகாரிகளுக்கு அவர்கள் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தைக் காட்டி இவ் விசேட கொடுப்பனவை வழங்கமுடியாது என அரசாங்கம் விடாப்பிடியாக மறுத்துவருகின்றது.

அரசாங்கம் இக்கொடுப்பனவு பற்றிய சுற்றறிக்கையில் வடக்கு—கிழக்குப் பிரதேசத்தில் சேவை புரியப் பணிக்கப்பட்ட தென்னிலங்கை வைத்தியர்கள் மட்டுமே இக்கொடுப்பனவுக்குத் தகுதியானவர்கள் என வரையறை செய்துள்ளது. நேரடியாக சிங்கள இனத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் என்று குறிப்பிட முடியாததால் தென்னிலங்கையில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும், அதைத் தேசிய அடையாள அட்டையில் உள்ள முகவரியின்படி அல்லது வாக்காளர் இடாப்புப் பதிவின்படி நிரூபிக்கவேண்டும் என்ற விதிகளின் மூலம் பெரும்பாலும் சிங்கள இனத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளுக்கு மட்டும் இந்தக் கொடுப்பனவு கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்துகொண்டுள்ளது. ஒரு சில தமிழ் பேசும் வைத்திய அதிகாரிகள் மேற்படி நிபந்தனைகளைப்பூர்த்திசெய்ததால் இக்கொடுப்பனவை பெற்றுள்ள போதிலும் அநேகமான வடக்கு—கிழக்கில் பணிபுரியும் தமிழ்பேசும் வைத்திய அதிகாரிகள் இக்கொடுப்பனவுக்கு உரித்தற்றவர்களாக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை வைத்திய அதிகாரிகள் சிலர் மே 2000 வரை கடமையாற்றினர். யாழ்ப்பாண மக்களுக்கு அவர்கள் வழங்கிய சேவைகள் விலைமதிப்பிட முடியாதவை. அதை நாம் நன்றியுடன் எமது மக்கள் சார்பில் நினைவு கூருகின்றோம். ஆனால் அவர்களில் ஒருவர் கூட யாழ்ப்பாண மக்களுக்கு சேவை புரியவேண்டுமென்று தாமாகவே முன்வந்தவர்கள் அல்லர்.

சுகாதார அமைச்சு அவர்களது முதல் நியமனத்தை வடக்கு —கிழக்கின் வைத்திய சாலைகளுக்கு வழங்கியிருந்தது. முதல் நியமனத்தை ஏற்றுப் பணிபுரிய மறுத்தால் வேலையை இழக்க வேண்டி வரும் என்ற காரணத்தினாலேயே வேறு வழியின்றி, எந்த முயற்சியும் பலன் தராத நிலையில் இங்கு வந்து கடமையாற்றினர்.

இங்கு கடமையாற்றும் தமிழ் பேசும் வைத்திய அதிகாரிகள் இங்கு சேவையாற்ற வேண்டும் என்பதற்காகப் பாதுகாப்புக் கெடுபிடிகளும், விலைவாசி அதிகரிப்பும் நிலவும் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் தாமாகவே முன்வந்து பணிபுரிபவர்கள். இவர்களும் நினைத்தால் ஏனையோர் போலத் தென்னிலங்கை நோக்கிப் போக முடியும். ஆனால் அரசாங்கம் இவர்களது சேவையை உதாசீனம் செய்துள்ளது.

மேலும் வடக்கு — கிழக்கு மாகாணத்தில்] அரசாங்க ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஊழியர்களுக்கும் அவர்கள் பெற்றுக்கொண்ட விடுப்புகளின் விகிதத்திற்கேற்ப கொடுப்பனவில் கழிக்கப்படுகின்றது. ஆனால் தென்னிலங்கை வைத்தியர்களுக்கான இவ் விசேட கொடுப்பனவில் இவை எவையும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. அவர்கள் விடுமுறையில் தென்னிலங்கையில் தங்கிநின்ற நாள்களுக்கும் கூட இக்கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது தற்காலிக இடமாற்றம் பெற்றுத் தென்னிலங்கையில் அவர்கள் பணியாற்றிய காலத்துக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் வடக்கு—கிழக்கில் பணிபுரியாத நாள்களும் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்கில் கடமை புரிவதற்காக முன்னெப்போதும் நாம் விசேட மேலதிக கொடுப்பனவு எதையும் கோரியதில்லை. ஆனால், ஜனவரி 2000 முதல் அரசு தென்னிலங்கை வைத்திய அதிகாரிகளுக்கு மட்டும் 'Special Mission Allowance' என்ற இந்த விசேட கொடுப்பனவையும் மேலும் பல சலுகைகளையும் வழங்கப்போவதாக அறிவித்தது. அப்போதே நாம் இவ்வகையான பாகுபாடான நடவடிக்கையை கைவிடுமாறு அரசாங்கத்தைக் கோரினோம்.

அரசாங்கம் இக்கொடுப்பனவை வழங்குவதாயின் பாரபட்சம் ஏதுமின்றி அனைத்து வைத்தியர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை எமது சங்கம் முன்வைத்தது. எமது யாழ். மாவட்ட கிளைச் சங்கமும் வடக்கு — கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களின் கிளைச் சங்கங்களும் எமது தாய்ச் சங்கத்தின் துணையுடன் அரசாங்கம் தனது பாரபட்சமான செயலைக் கைவிட்டு அனைத்து வைத்திய அதிகாரிகளுக்கும் இவ்விசேட கொடுப்பனவை வழங்க வேண்டும் என தொடர்ச்சியாகப் போராடி வருகின்றன. கடந்த மார்ச் மாத நடுப்பகுதியில் எமது கோரிக்கையை கௌரவ சுகாதார அமைச்சர் அவர்கள் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு அமைச்சரவையின் அனுமதிக்கு சமர்ப்பித்த போதும் அமைச்சரவை எமது நீதியான கோரிக்கையை முற்றாக நிராகரித்துவிட்டது. அரசாங்கம் எமது கோரிக்கையை உதாசீனம் செய்து தனது இன பேத உணர்வை வெளிப்படுத்தியுள்ளது,

ஆரம்பம் முதல் வடக்கு—கிழக்கு மாகாணங்களின் ஏனைய கிளைச் சங்கங்களும் எமது கிளையின் உறுப்பினர்கள் பலரும் அரசாங்கத்தின் பக்கச் சார்பான நடவடிக்கையை கண்டிக்கவும் எமது நியாயமான கோரிக்கையை வென்றெடுப்பதற்காகவும் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமென எண்ணங்கொண்டிருந்தனர். நாம் இம்முடிவை இதுவரை தவிர்த்து வந்தோம். மகஜர்கள், ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தங்கள் என்ற அளவில் எமது எதிர்ப்பை மட்டுப்படுத்தி வந்ததற்கு எமது மக்களின் நலன் பற்றிய கவலையே காரணமாகும்.

நாட்டின் ஏனைய எப்பகுதிகளிலும் இல்லாத வகையில் இங்கு திட்டமிடப்பட்ட வகையில் உருவாக்கப்பட்டுள்ள மருந்துகள், வைத்திய உபகரணங்கள், ஊழியர்களின் தட்டுப்பாட்டினால் சுகாதார சேவை மிகவும் பாதிப்படைந்துள்ளது. இத்தட்டுப்பாட்டினால் எமது மக்கள் தவிர்த்திருக்கக்கூடிய உயிரிழப்புக்களை நீடித்த,நிரந்தர பாதிப்புகளையும் அனுபவித்து வருகின்றார்கள். பெருமளவு பற்றாக்குறைகள் இருந்த போதிலும் இந்த இழப்புகள் பாரிய அளவில் ஏற்படாமல் இருப்பதற்கு சுகாதார சேவையில் உள்ள சகல ஊழியர்களினதும் வலிமைக்கு மிஞ்சிய கடும் உழைப்பே காரணமாகும். இந்நிலையில் வைத்திய அதிகாரிகளாகிய நாம் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது மக்களை மேலும் பாதிக்கும் என்பதாலேயே அதை இயன்ற வரை தவிர்த்து வந்தோம். ஆனால் தமிழ் பேசும் வைத்திய அதிகாரிகள் என்பதற்காக அரசாங்கம் எம்மைப் புறக்கணித்து வருவதை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியாது.

அரசாங்கம் விடாப் பிடியாக மேற்கொண்டு வரும் இந்த இனப்புறக்கணிப்பை எதிர்த்து வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்திய அதிகாரிகள் அனைவரும் 11–06–2001 திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். இக்காலப்பகுதியில் அவசர சிகிச்சைகள் மட்டுமே வழங்கப்படும்.

அரசாங்கம் எமது இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று தனது இனரீதியான பராபட்சமான நடவடிக்கையை கைவிட்டு அனைத்து வைத்திய அதிகாரிகளுக்கும் மேற்படி விசேட கொடுப்பனவை வழங்கும் வரை எமது வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும். இதனால் நோயாளர்கள் பெரும் சிரமம் அடைவார்கள் என நாம் அறிவோம். ஆனால் எமது நியாயமான இந்தக் கோரிக்கையை வென்றெடுக்க வேறு போராட்ட வழியேதும் இல்லாததால் இம்முடிவுக்கு பெரும் மனவருத்தத்துடன் நாம் வந்துள்ளோம். எமக்கு விரைவில் நியாயம் வழங்கி அரசாங்கம் மக்களுக்கு ஏற்படும் துயரங்களை நீக்க முன்வருமென நம்புகின்றோம்.

(ஐ-5-15-139)

★

## புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம்

# அகதிகளின் குறைபாடுகளை கவனிக்க விசேட ஆணையாளர்

கொழும்பு, ஜூன் 7

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசித்துவரும் 12,000 அகதிக் குடும்பங்களின் குறைபாடுகளையும் துயரங்களையும் ஆராய்ந்து தீர்த்து வைப்பதற்காக ஜனாதிபதி குமாரதுங்கவினால் விசேட ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தனது செய்தி வெளியீட்டில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இவர் வடக்கு — கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனவின் கீழ் பணிபுரிவார்.

## குடிபோதைத் தவிர்ப்பு பயிற்சிப்பாசறை

குருநகர், ஜூன் 7

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தின் ஆதரவுடன் குடிபோதைத் தவிர்ப்பு பயிற்சிப்பாசறை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் ந. வேதநாயகன் தலைமையில் நடைபெற உள்ள இப்பாசறையில் அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு. சீ.ஜீ. ஜெயக்குமார் அடிகள், கலாநிதி எம். சண்முகலிங்கன்,சமூக விழிப்புணர்வுக்குழு இணைப்பாளர் யோசப் பாலா, உளவளத்துணையாளர் பிறிற்ரோ ஆகியோர் இப்பயிற்சிநெறியை நெறிப்படுத்துவர். (க-51)

## 25 ஆவது வருட திருவிழா திருப்பலி

குருநகர், ஜூன் 7

குருநகர் அன்னை வேளாங்கண்ணிஆலயத்தின் 25ஆவது வருடத் திருவிழாத் திருப்பலி நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5. 30 மணிக்கு நடைபெற உள்ளது.

இன்று வியாழக்கிழமை நண்பகல் 12மணிக்குக் கொடியேற்றமும், நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

(க–51)

# சமய சந்நிதிகளில்

காரைநகர், ஜூன் 7

ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ள இம் மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும், மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(க–73)

★ ★ ★

சுழிபுரம் – பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணியம் சுவாமி கோவில் நவோத்தர சகஸ்ர மகா சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

கந்தரநுபூதி மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அன்றைய தினம் பரிசில் வழங்கலும் இடம்பெறும். டாக்டர் க.சிவராசா பரிசில்கள் வழங்குவார்.

(க-28)

★ ★ ★

கரவெட்டி மித்தில் மருதடி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோவில் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 6. 31 மணிக்கும் 8. 04 மணிக்கும் இடையில் நடைபெறும்.

இக்கும்பாபிஷேகத்தை கொள்ளுப்பிட்டி கருமாரி அம்மன் கோவில் பிரதமகுரு துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். (க–173)

★ ★ ★

சரவண தேவபுரம் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 7.05 மணிவரை உள்ளசுப வேளையில் நடைபெற உள்ளது. (க–73)

★ ★ ★

வண்ணார்பண்ணை கிழக்கு கந்தர்மடம் பழம் வீதி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்த சாந்தீக மஹோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஜூன் 21 ஆம் திகதி வரை பன்னிரண்டு தினங்களுக்கு நடைபெற உள்ளது.

ஜூன் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(க-152)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 7 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (ம-100)

## நவாலியில் தேடுதல்

நவாலி, ஜூன் 7

நவாலிப் பகுதி நேற்று புதன்கிழமை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டு வீடு வீடாகச் சென்று படையினர் குடும்ப அட்டைகளைச் சோதனை செய்தனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் பெரும் எண்ணிக்கையான கனரக வாகனங்களுடன் அப்பகுதிக்குவந்திறங்கிய படையினர் உத்தியோகத்தர்களையும் பாடசாலை மாணவர்களையும் தவிர வேறு எவரையும் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை.

(ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## நீதியரசர் கே.பாலகிட்ணர்

எமது கழகத்தின் ஆரம்ப காலத் தலைவரும், அப்போதைய சாவகச்சேரி மாவட்ட நீதியரசரும், ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசருமான **அமரர் பாலகிட்ணர்** அவர்களின் பிரிவினையொட்டி எமது ஆழ்ந்த துயரத்தை அவரது குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக் காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரிமாக் கழகம்,
சாவகச்சேரி.

(சி/17021)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வாடகைக்கு வீடு

யாழ்.பல்கலைக்கழக விவசாயத் துறையினர் பயன்படுத்துவதற்கு வசதியாக சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவையாகவுள்ளது. கொக்குவில் தெற்கு, கொக்குவில் கிழக்கு மற்றும் திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி தெற்கு பிரதேசங்களாகவும், பல்கலைக்கழகத்திற்கு ஐந்து மைல் சுற்றாடலிலும் அமைந்திருப்பது விரும்பத்தக்கது. வாடகை பற்றிய விவரங்கள் நேரிலே கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் *பதிவாளர், யாழ்.பல்கலைக்ழகம், யாழ்ப்பாணம* என்னும் முகவரிக்குத் தபால் மூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

*யாழ்.பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாணம்.* (C/17014) **பதிவாளர்.**


## கூட்டுறவுப் பயிற்சி

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையால் கூட்டுறவுத் தராதரப் பத்திரப் பயிற்சி மிக விரைவில் நடத்தப்படவுள்ளதாக கூட்டுறவுச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 2 ஆம் திகதி கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ள இப்பயிற்சிநெறி ஐந்தரை மாதங்கள் நடைபெறும்.

இந்தப் பயிற்சிநெறியில் பங்கு பற்றி பயன்பெற விரும்புவோர் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர் விவரங்களை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் கூட்டுறவுச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## மீனவர்கள் நீதிமன்றில் ஆஜர்

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களில் 39 பேர் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார். (ஜ-5)


# சென்றல் நர்சிங் ஹோம் (த.வ.து) (வது).

350, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**மீண்டும் சேவைகள் ஆரம்பம்: *04–06–2001***

வெளிநோயாளர் சிகிச்சை & கர்ப்பவதிகள் கிளினிக் } *காலை 8.00 மணி – பி.ப.1.00 மணி*

*ஏனைய சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

(88769) -நிர்வாகம்.



# பரீட்சைத் திகதி மாற்றம்

வட இலங்கைச் சங்கீத சபையினால் 09-06-2001, 10-06--2001 ஆகிய திகதிகளில் நடத்தப்பட இருந்த அறிமுறைப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 23-06-2001, 24-06-2001 ஆகிய திகதிகளில் நடைபெறும் என்பதைப் பரீட்சார்த்திகளுக்கு அறியத்தருகிறோம்.

திருமதி செ.மகாலிங்கம்,
யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும்,
(C/17016) வட.இலங்கை சங்கீத சபைத் தலைவரும்.



# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் வைகாசி மாதம் 24 ஆம் நாள் இன்று (07.06.2001) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல் 12.40 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் **ஸ்கந்தன்** (கணனிப் பொறியியலாளர், கொழும்பு) அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி **ரேவதி** அவர்களுக்கும்

சந்நிதி முருகன் திருவருள் துணைகொண்டு கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருமணம் நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(இரு வீட்டார் அறிவிப்பு)

*நிரந்தர முகவரி:-*
**திரு.திருமதி திருநாவுக்கரசு**
**(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)**
**சின்னமலை, தொண்டமனாறு.**

*தற்காலிக முகவரி:-*
**உபய கதிர்காமம், புலோலி தெற்கு, புலோலி.** (c/17017)

*நிரந்தர முகவரி:-*
**திரு.திருமதி ஞானபண்டிதன்**
**சந்நிதி வீதி, தொண்டமனாறு.**

*தற்காலிக முகவரி:-*
**18, E.S. பெர்னாண்டோ மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு - 06**



# சுன்னாகம் 'நாகம்ஸ்' திரையரங்கில்

## "மானுடம்" நிதிஉதவிக் காட்சிகள்

காலம்: நாளை (08-06-2001) வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 10 மணி - **"சேது"**
மாலை 3 மணி -- **"பாரதி"**
(விருதுகள் பெற்ற திரைப்படங்கள்)

அன்பளிப்பு:- 50/=, 100/=, 250/=

உங்களை அன்புடன் அழைக்கும் :
சமூகவியல் சமூகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(88753)



# சுன்னாகத்தில்!

## எரிக் கணேஷ்

வலிகாமம் வடக்கு, மேற்கு, தெற்கு மக்களின் நலன்கருதி 'எரிக் கணேஷ்' ஸ்தாபனத்தினர் சுன்னாகத்தில் தமது கிளை நிறுவனம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்.

★ உங்கள் முக அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டிக்கொள்ள
★ மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்திக்கொள்ள
★ கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!



# எரிக் கணேஷ்



**மூக்குக் கண்ணடியகமும் பல்கட்டுமிடமும்**

இல.80, கே.கே.எஸ். வீதி (சந்திக்கு அண்மையாக), சுன்னாகம்.

*தலைமையகம்:*
*564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

*கிளை:*
*91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.*

சங்குப் பற்கள் கட்டிக் கொடுக்கப்படும் (C/17018)



# மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்காக

**மாபெரும் மாட்டுவண்டிச்சவாரிப் போட்டி**

ஒன்று நடைபெறவுள்ளது.

*இடம் :-* ஆவரங்கால் சவாரித்திடல்
*காலம் :-* 10.06.2001 ஞாயிற்றுக்கிழமை
*நேரம் :-* பிற்பகல் ஒரு மணி
*பிரவேசம் :-* 10/=

(88770) - செயலாளர்.



# வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை - மானிப்பாய்

# கேள்வி அறிவித்தல்

2000.12.03ஆம் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் இறைச்சிக் கடைகள் 2001.06.15ஆம் திகதி தொடக்கம் 2001.12.01ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு கொடுப்பனவுக்காக கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதி திகதி :- 2001.06.13 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி :- 2001.06.14 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2001.06.14 பிற்பகல் 3.00 மணி

அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| 1. மானிப்பாய் கிராம உப அலுவலகம் | 1) ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக் கடை | 1500/- | 300/- | 100,000/- |
| | 2) ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக் கடை | 1500/- | 300/- | 10,000/- |

*வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை,*
*தலைமைச் செயலகம்,*
*நகர மண்டபம்*
*மானிப்பாய்.* (C/17015)

**வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்,**
*ஜே.பி.யு.எம்.*
*தலைவர்,*
*வலி.தென்மேற்குப் பிரதேச சபை,*
*மானிப்பாய்.*


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை கந்தையா (T.S.K.)

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தையா(T.S.K. பிரபல வர்த்தகர், டிக்கோயா) 04-06-2001 திங்கட்கிழமை டிக்கோயாவில் காலமானார்.

இவர் அன்னபூரணியின் அன்புக் கணவரும் திருமதி உதயராணி, உதயகுமார், திருமதி உதயமாலா, திருமதி உதயமதி, உதயமலர், உதய மாலினி, உதயமாலதி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் தம்பு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டிக்கோயாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணப்கள் அனைவரும் ஏறுக் கொள்ளவும்.

*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.* (88768)

தகவல்:-
செ.ரஞ்சன்
(பேறாமகன்)

## நாகலிங்கம் தனபாலசிங்கம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது ஊரெழு கிழக்கில் வசித்தவருமான நாகலிங்கம் தனபாலசிங்கம் நேற்று(06-06-2001) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ரோகிணி (கனடா), பாமினி(கனடா), பாலினி(ஜேர்மனி), ராகுலன்(கனடா), முகுந்தன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யுயாந்தகி, கவிதா, சிவானந்தன், இளங்கோ, துஸ்யந்தன் ஆகியோரின் அருமை மாமனாரும் கிறோன், நிறோஜன், மயூரி, ரிஷானா, தீபா, மெலனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(7-6-2001) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரந்தர முகவரி:-
*முத்து பவனம்,*
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

தற்காலிக முகவரி:-
*ஊரெழு கிழக்கு,*
*பிள்ளையார் முன் ஒழுங்கை,*
*சுன்னாகம்.*

தகவல்:-
திருமதி த.இராஜேஸ்வரி
(மனைவி)
ப.நாதன்(தம்பி)

(88771)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடக்கு - கிழக்கு மாகாண கலை கலாசார அமைச்சினால்,

**'பாஞ்சாலி சபதம்'**

எனும் நாடகத்தை ஆங்கிலத்தில் எழுதியமைக்காக சாகித்திய விருது பெற்ற பருத்தித்துறை கலைஞர் வட்டத்தை சேர்ந்தவரும், சமூக சேவையாளருமான

**திரு. இராசையா பஞ்சலிங்கம்**

அவர்களை பாராட்டுவதுடன், அவர் மேலும் சமூகத்திற்கும், நாடகத்துறைக்கும் தன்னால் இயன்ற சேவையைத் தொடர வாழ்த்துகின்றோம்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்,
பருத்தித்துறை.

(88767)

## ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த், கரண்,
சிம்ரன், விவேக்
மற்றும் பலர் நடிப்பில்

**கண்ணெதிரே தோன்றினாள்**

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)

15.06.2001 முதல்

**சிட்டிசன்**

(C/17000)

## நாகம்ஸ்

சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி,
பிரகாஷ்ராஜ் நடித்த

**வானவில்**

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(88594)

## லக்ஷ்மி இணுவில்

8ஆம் திகதி வரை
அஜித் ,லைலா மற்றும் பலர் நடிப்பில்

**தீனா**

(ரீல்ஸ்)
09ஆம் திகதி முதல் **பாட்டாளி**
காட்சிகள் தினசரி : 10.30, 2.30 (ப.நே.)
சனி, ஞாயிறுகளில்
10.30, 2.00, 5.00 (பழையநேரம்)

(88775)

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய உள்வீதி மணிமண்டப

## அடிக்கல் நடும் விழா

இன்று (07.06.2001) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் உள்ள சுப வேளையில் மேற்படி ஆலயத்தின் உள்வீதி மணிமண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளருமான

**உயர்திரு. க.மணிபல்லவராஜன்**
**(நிசாந்தன்)**

அவர்கள் கலந்துகொண்டு
அடிக்கல்லை நட்டு வைப்பார்.

இந்நிகழ்வில் முருகன் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஆலய சேவையில,
- நிர்வாக சபையினர்.

(C/17023)

## சுனில் ஆட்ஸ்

★ 28-05-2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளவும்.
★ 12-06-2001 அன்று கொழும்புக்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

**சுனில் ஆட்ஸ்**

★ A.R.Rahman இன் MP3 CD கள் விற்பனைக்குண்டு.
★ தமிழ், ஹிந்தி, MP3 CD கள் விற்பனைக்குண்டு.
★ CD இல் இருந்து CDக்கு பாடல் பதிவு செய்துதர 300/= மட்டுமே.

(C/17019)


## 31 ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில்
1976 - 07 - 27



யேசுவின் மடியில்
2001 - 05 - 07

**செல்வி ஞானமலர் துரைராஜா**

(உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவி)

"என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கண்ணைக் கண்ணீருக்கும் என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்
நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்
விசுவாசித்தேன் ஆகையால் பேசுகின்றேன்"

(சங்கீதம் 116.8-10)

உமது பிரிவால் துயருறும் அன்புக் குடும்பத்தினர்.

தகவல்:
**துரைராஜா ஞானசுதன்** (சகோதரன்)
பழைய மாணவன், யாழ்.பரியோவான் கல்லூரி

Mc Leod Hospital,
Inuvil.

(88773)


## சர்வதேச இந்துமத குருபீடம்

**(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)**
**(REGD. NO - N/A/920)**

## இறையருள் வேண்டி வாழ்த்துகிறோம்

இலங்கைத் திருநாட்டின் தலைசிறந்த சிவாச்சாரியார்
சர்வதேச இந்துமத குருபீட வித்வச்சபைத் தலைவர்

**'பிரதிஷ்டா சிரோமணி'**

**பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக்குருக்கள்**

அவர்களின் பவளவிழாச் சிறப்புற இறையருளை வேண்டுகிறோம்.

பவள விழா நிகழும் காலம் :- 10.06 .2001 ஞாயிற்றுக்கிழமை
இடம் :- மயூரபதி அம்பாள் தேவஸ்தானம்
தலைமை :- பிரம்மஸ்ரீ பா.ஷண்முகரெட்ணசர்மா J.P.

'சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி'
**ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார். J.P.**
**சர்வதேச இந்துமத குருபீடம்**
**(APPROVED BY THE GOVERNMENT OF SRILANKA)**
90/22, ஜோசப் டயஸ் லேன் - கொழும்பு - 15
**T.P - 072 - 422239 , FAX - 527025**

(C/17020)

## எமது இதயபூர்வமான நன்றிகள்

காரைநகர் மருதமலை முருகன் சனசமூக நிலையத்திற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் தொலைக்காட்சிப் பெட்டி, மின் பிறப்பாக்கி, அன்ரனா என்பவற்றை வழங்கியமைக்காக-



வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சர்

**மாண்புமிகு கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்**

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தீவக அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான

**உயர்திரு. நடராசா மதனராசா அவர்களையும்,**
**தோழர் திரு.விசு** (பொறுப்பாளர், E.P.D.P காரைநகர்) அவர்களையும்

மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் எமது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மருதபுரம், காரைநகர் மேற்கு. (C/17022) – மருதமலை முருகன் சனசமூக நிலையத்தினர்.


## மரண அறிவித்தல்கள்

### தில்லையம்பலம் நடராசா

18/3,சுவாமியார் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகக் கொண்ட தில்லையம்பலம் நடராசா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரானந்தன், கமலேஸ்வரி, நந்தகுமார், ஜெகதீஸ்வரி (ஆசிரியை), சிவாநந்தன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினி தேவி, நடேசநாதன், ஜீவா(ஆசிரியர்), அற்புதமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்மிளா, டிலான் டெல்பின், டொனெக்சன், றொனிஸ்ரினி, றம்மியன், தர்சிகா ஆகியோரின் பேரனும் தங்கமுத்துவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07-06-2001) வியாழக்கிழமை காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம் இல்லத்தில் நடைபெற்று நண்பகல 12 மணியளவில் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி,
மருதனார்மடம்.

தகவல்:-
ஜெகா (மகள்)
ஜீவா (மருமகன்)

(88772)

### செல்வி சீதாதேவி கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

சீதா ரீச்சர் என்று அன்புடன் அழைக்கப்படும் அளவெட்டி தெற்கை வதிவிடமாகக் கொண்ட செல்வி சீதாதேவி கந்தையா நேற்று (06.06.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பார்வதியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் திருமதி சரஸ்வதி நாகலிங்கம், திருமதி புவனேஸ்வரி நடனசபாபதி, காலஞ்சென்ற திருமதி கமலாதேவி இராஜசிங்கம், திரு. இரட்ணவேல் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-06-2001) வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்பளை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
'வேல்இன்'
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:-
இ.அருள்மதி (பெறாமகள்),
க.நித்தியானந்தன்
(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

(88774)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் விசேட மகாசபைக் கூட்டம் நேற்று அதன் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது. ஒன்றியத்தின் தலைவரான பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் இந்தக் கூட்டத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பதவியேற்ற பின்னர் பீடாதிபதி மகேஸ்வரக்குருக்கள் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ச.கோபாலகிருஷ்ணஐயர், வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்துகொண்ட குருமாரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: றோய் மதிவதனன்)

மாவட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் முறையீடு

# இராணுவத்தினரின் சோதனைகளால் பாடசாலை செல்வது தாமதமாகிறது

## அடிக்கடி ஏற்படும் மின்தடை குறித்தும் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

காலை நேரத்தில் நடைபெறும் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளினால் பாடசாலைகளுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாதுள்ளது.

இவ்வாறு யாழ்செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் (சிறுவர் உரிமைகள்) கூட்டத்தில் கலந்துகொண்ட சிறுவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் இயங்கும் இந்தக் குழுவில் யாழ்.மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள சிறுவர் பிரதிநிதிகள் ஒவ்வொருவர் யுனிசெவ், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட 35 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

ஒவ்வொரு மாதமும் இந்தக் குழுவின் கூட்டம் யாழ்.செயலகத்தில் நடைபெற்று வருகிறது.

அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்ட விடயம் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறிய சிறுவர்களே இந்த விடயத்தை சுட்டிக் காட்டினார்கள்.

ஆலயங்கள் மற்றும் இடங்களில் தேவையற்ற நேரங்களில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதினாலும், மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுவதினாலும் தமது கல்வியில் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் சிறுவர்களால் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

### அலஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை உப்புவெளிக்கு அருகில் அமைந்துள்ள இந்த அகதி முகாமைச் சூழ இராணுவத்தினதும் கடற்படையினதும் மொத்தம் ஐந்து முகாம்கள் அமைந்துள்ளன.

இந்தப் பகுதியில் கடந்த வாரம் நிலக்கண்ணி ஒன்று தவறுதலாக வெடித்ததை அடுத்தே - சுற்றாடலில் உள்ள படை முகாம்களின் பாதுகாப்புக் கருதி - அகதிகளை அப்புறப்படுத்தும் முடிவைப் படைத தரப்பு எடுத்ததாகத் தெரியவருகின்றது. (உ-6)

### நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் இந்தக் கருத்து அவர்களால் நோர்வேத் தரப்புக்கு உரிய முறையில் உணர்த்தப்பட்டிருப்பதாகவும் -

வேறு சில செய்தி ஊடகங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் -

தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகளில் முன்னகர்வுக்கு இடமுண்டா அல்லது இல்லையா என்பதை அறுதியிட்டு முடிவு செய்வதே ஜக்லண்ட் - சொல்ஹெய்ம் குழுவின இப்போதைய விஜயத்தின் நோக்கம் என்றும் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். (உ-ம-21)

### நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கவின் 77 எம்.பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இது தொடர்பான முடிவு பின்னர் அறிவிக்கப்படும் என சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை ஆரம்பித்த ஐ.தே. கட்சியின் எம்.பியான டிரோன் பெர்னாண்டோ -

நாடாளுமன்றத்துக்குரிய அதிகாரங்களைக் காப்பாற்றுமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். நீதிமன்றத்தை விட நாடாளுமன்றத்துக்குக் கூடிய அதிகாரங்கள் இருப்பதால் பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணையை நேர்மையாக - அச்சமின்றி - முன்னெடுக்குமாறு அவர் சபாநாயகரிடம் கோரினார். (ம-6)

### 11பொலீஸார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர்.

இந்தப் பதினொ:ரு பொலீஸாரும் மத்திய மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபரின் உத்தரவின் கீழ் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரால் பணியில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இடைநிறுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-6)

### அநாதரவான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்றம் ஏற்பட்டது. இது குறித்து உடனடியாகப் படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

அங்கு விரைந்த படையினர் 'பார்சலை' எடுத்து மூதூர் இறங்குதுறைப் பகுதியில் வீசினர். ஆனால் அதிலிருந்து குண்டு எதுவும் வெடிக்காததை அடுத்து குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் வரவழைக்கப்பட்டு 'பார்சல்' சோதனை செய்யப்பட்டது. அதறகுள் இருந்து மணிக்கூடு ஒன்று மட்டுமே மீட்கப்பட்டது. (ம-6)

### சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணித்தார்.

இதேவேளை -

சந்தேக நபர்களில் ஒருவரான சப் இன்ஸ்பெக்டர் கொளுகே ஏ.நிரோஷன், மன்னார் நீதிமன்றில் தான் ஆஜர் செய்யப்பட்டால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் -

எனவே இந்த வழக்கை வேறு நீதிமன்றுக்கு மாற்றுவதற்கு உத்தரவிடுமாறும் -

மேன்முறையீட்டு மன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றைய தவணைக்கு மட்டும் அவரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டாம் என்று அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தது.

இதனை அடுத்தே சந்தேகநபர்கள் 14 பேரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவில்லை என்று மன்னார் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

சந்தேகநபரான சப் இன்ஸ்பெக்டர் தாக்கல செய்த மனு மீதான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று வழங்கவுள்ளது. (உ-ம)

## விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

இணுவில் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற டிரக் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் இடது கால் முறிந்து படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரும், தாவடியைச் சேர்ந்தவருமான சிதம்பரப்பிள்ளை திருச்செல்வம் (வயது50) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-15)

## விமானப் பதிவுகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்ப்பாணத்துக்கும் இரத்மலானைக்கும் இடையிலான விமான சேவைக்கான விமானப் பதிவுகள் அனைத்தும் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திரும்பிச் செல்வதற்கான பயணச் சீட்டுடன் (Return Ticket) வந்தவர்கள் பலர் திரும்பிச் செல்வதற்காகப் பதிவு செய்துள்ளதனால் புதிய பதிவுகளை மேற்கொள்ளும் பணி ஒத்திவைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

### காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேதினம் விறகு வெட்டச் சென்றவரான யோகநாதன் கேசவராசா(வயது 34) என்பவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

தேன் எடுக்கச் சென்றவர்களின் சைக்கிள்கள் பின்னர் அவர்களது உறவினர்களால் மீட்கப்பட்டன.

ஆரம்பத்தில் தாம் இவர்களைக் கைது செய்யவில்லை என்று மட்டக்களப்பில் உள்ள மனித உரிமைகள் அலுவலகத்துக்கு இராணுவத்தினர் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து இவர்கள் காணாமற்போனமை தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் உறவினர்களால் முறையிடப்பட்டது.

நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் இவர்கள் தொடர்பாக இராணுவத்தினரிடம் விசாரணை செய்த சமயம் -

வாழைச்சேனைப் பிரதேசத்துக்குப் பொறுப்பான 232ஆவது பிரிகேட் இராணுவ அதிகாரி இவர்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் இவர்கள் எங்கு வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவர்களின் சடலங்களுக்கு என்ன நேர்ந்தது போன்ற விடயங்கள் தெரிவிக்கப்படவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

- இவ்வாறு ஐ.பி.சி.மேலும் தெரிவித்தது. (உ-6)

# முக்கிய மருந்துகளுக்கு ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்யும் போது பயன்படுத்தப்படும் 'நியோஸ்ரிக் மீ' மருந்தும் மற்றும் நஞ்சு அருந்தியவர்களுக்கு வழங்கப்படும் 'பாம் அன்டிபோட்' ஆகிய மருந்துகள் முடிவடைந்துவிட்டதால் உயிரிழப்புகள் ஏற்பட சந்தர்ப்பம் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

" இவைதவிர பனடோல் மற்றும் போலிக் அசிற், அஸ்பிறின் போன்ற மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும தெரிவித்தன.

மருந்து தட்டுப்பாடு ஏற்படுவது யாழ். போதனா வைத்தியசாலையின் தொடர் பிரச்சினையாகவே உள்ளது. இது தொடர்பாக பல தடவைகள் உயர் அதிகாரிகளிடமும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் எடுத்துக் கூறியுள்ளோம்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்குக் காத்திருந்து பின்னர் மருந்துகளை இங்கு எடுத்துவர முன்னர், இங்கு நோயாளிகள் உயிரிழந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குடாநாட்டில் வாழும் ஒவ்வொருவருக்கும் தெரிந்த விடயம். இதனை உணர்ந்து யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகளை விரைவாக எடுத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும்-

என்று வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-6)

## டக்ளஸ் வாழ்த்து

யாழ்ப்பாணம்,ஜூன்7

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

குருபீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின் ஈ.பி.டி.பியின் இந்துசமய விவகாரப் பொறுப்பாளர் ந.திரிலோகநாதன் சகிதம் பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் அமைச்சரை நேற்று அவரது அலுவலகத்தில் வைத்துச் சந்தித்தார்.

குருபீடாதிபதியை வாழ்த்திய அமைச்சர் தனது முழு ஒத்துழைப்பையும் வேண்டிய உதவிகளையும் இந்து மத குரு பீடத்துக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளார். (ம-5)

## விமானப் படைத் தளபதி மட்டு. விஜயம்

கொழும்பு,ஜூன்7

விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி நேற்று உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு மட்டக்களப்பு விமானப் படைத்தளத்துக்குச் சென்றுள்ளார்.

நீண்டகாலத்தின் பின்னர் திடீர் விஜயமாக மட்டக்களப்புக்குச் சென்றுள்ள விமானப்படைத்தளபதி மட்டக்களப்பு மாவட்ட விமானப்படை அதிகாரிகளுடன் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியதுடன் விமானப் படையினருடனும் உரையாடினார். (ம-5)

துள்ளி வரும்
உங்கள் மழலைகளை
அள்ளி அணைக்கிறது உங்கள்
SUBRA (14)
(சித்தன்கேணி)
தரம் 3,4 புதியபிரிவு
5.06.2001 ஆரம்பம்
☆ அனுமதிக்கு முந்துங்கள்.
(C/16908)

வீக்ளா
கல்வி நிறுவனம்
பிரத்தியேக வகுப்பு
கணிதம், விஞ்ஞானம்
வினா, விடை
கணிதம் : C.K.B. தயாளன்
பிரிவு I நாளை ஆரம்பம்
Mon., Fri., Wed. 6.30 மணி
பிரிவு II Sat., Sun. 12.00 மணி
விஞ்ஞானம்
திரு. தேவா
பிரிவு I Sat, Sun 1 மணி
ஆரம்பம்: 09-05-2001 1மணி
(88745)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசரத்தினம் நாகரத்தினம்

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் நாகரத்தினம் 01.06.2001 வெள்ளிக்கிழமை அன்று இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சுதுமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசரத்தினம் (முன்னாள் சிறாப்பர், யாழ்/வர்த்தக வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரி, மகாதேவன் (ஜேர்மனி), கௌசலாதேவி (இந்தியா), சகுந்தலாதேவி (இந்தியா), காலஞ்சென்றவர்களான பேரின்பதேவி, வாமதேவன், சறோஜினிதேவி (சண்டிலிப்பாய்), கிருஷ்ண்குமார் (ஜேர்மனி), உமாதேவி (கனடா), யசோதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகிர்தநாயகம் (காலஞ்சென்ற) பரமேஸ்வரி, மதியாபரணம், காலஞ்சென்றவர்களான தணிகாசலம், செல்வராசா, மனோன்மணி, காலஞ்சென்ற பாக்கியநாதன், பாமினி, இர்ாசேந்திரம், குகனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கந்தசாமி (லண்டன்), பரிமளகாந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய். (88778) பாக்கியநாதன் சறோஜினிதேவி (மகள்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org